# உதயன்

சுடர் : 36 | கதிர் : 209 | புதன்கிழமை | ஆனி 09 ஆம் நாள் 23 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


# புலிகளுடன் தொடர்புடையோரை விடுவிக்க வேண்டும் அரசு

## நாமல் திடீர் கரிசனை



கொழும்பு, ஜூன் 23

இறுதிப் போரில் பங்கேற்ற சுமார் 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் மறுவாழ்வளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்டனர். எனவே, புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும்.

19 ➤

அரசியல் கைதிகளின் விடுதலைக்கு

## பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாது ஒழிப்பதே ஒரே தீர்வு!

### நாமலுக்கு கஜேந்திரகுமார் பதில்

அரசியல் கைதிகளின் விடுதலைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதே ஒரே தீர்வு. அதைவிடுத்து உங்கள் அரசியல் நலனுக்காக இந்த விடயத்தைப் பயன்படுத்தாதீர்கள் இவ்வாறு நாமலுக்குத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். (விரிவு பக்கம் 7)

## புலிச் சந்தேகநபர்களை விடுவிப்பதற்கு ஆதரவு

### பிரேரணையை வரவேற்றார் பொன்சேகா

புலிகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுவிப்பது தொடர்பான பிரேரணையை வரவேற்கின்றோம். அதற்கான நடவடிக்கை நேர்மையுடன் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதியும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். (விரிவு பக்கம் 6)

## திங்களன்று மாத்திரம் கொரோனாவால் 71 பேர் இறப்பு

### ஒட்டுமொத்த பலி 2,704

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் கொரோனாத் தொற்று காரணமாக மேலும் 71 பேர் சாவடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பதிவாகிய இந்த 71 இறப்புக்களில் 38 பெண்களும், 33 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று

19 ➤

## நேற்று தொற்று 2,071

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 71 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயி

19 ➤

## வடக்கில் கொரோனா 89

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாவட்டத்தில் 80 பேர் உட்பட வடமாகாணத்தில் நேற்று 89 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

19 ➤

## கொரோனாவால் யாழ்ப்பாணத்தில் நால்வர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணத்தில் மேலும் நால்வர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தகவல்கள் தெரிவிக்

19 ➤

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வடமராட்சி, ஜூன் 23

மோட்டார் சைக்கிள் - ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று

19 ➤

## மோ.சைக்கிள் விபத்து குடும்பத்தலைவர் பலி

வடமராட்சி, ஜூன் 23

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த குடும்பத்தலைவர் உயிரிழந்தார். பின்னிருக்கையில் அமர்ந்து சென்றவர் படுகாயம

19 ➤



## மாகாணப் பயணக் கட்டுப்பாடுகள் தற்போதைக்கு நீங்க வாய்ப்பில்லை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் இன்னமும் குறையவில்லை. நாளாந்த கொரோனா மரண எண்ணிக்கையும் இன்னமும் குறையவில்லை. இந்தநிலையில், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை இப்போதைக்குத் தளர்த்த முடியாது.' இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல

19 ➤


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி: 021 493 0000, 077 1209994

விளம்பரம்: 021 493 1111, 071 6182182




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று வீதத்தை குறைத்து காண்பிக்க முயற்சியா?

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சந்தேகம் வெளியீடு

**கொழும்பு, ஜுன் 23**



**நாட்டில் கொரோனாத் தொற்று வீதத்தைக் குறைத்துக் காண்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுப்பியுள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான வாசன் ரட்ணசிங்கம்,

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுபவர்களிலிருந்து தொற்று உறுதியாகுபவர்களின் சதவீதம் இந்த மாத ஆரம்பத்தில் 12.6 ஆகக் காணப்பட்டது. அது படிப்படியாக அதிகரித்து 16.2 சதவீதமாகக் காணப்பட்டது. தற்போது 12 வீதமாகக் குறைந்துள்ளது.

பி.சி.ஆர். சோதனை தொடர்பில் சந்தேகம் உள்ளது. தொற்று ஆபத்தான பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். சோதனை அளவு குறைக்க ப்பட்டுள்ளது. அது போன்று மருத்துவமனைகள் மற்றும் இடைநிலை சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வெளியேறும்போது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுவதில்லை. ஆனால் எழுந்தமானமாக சோதனை மேற்கொள்ளப்படுவதாகக் காண்பிக்கப்படுகின்றது. தொற்றாளர்கள் வீதத்தைக் குறைத்துக் காட்ட இது மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில், எந்தக் காலப் பகுதியில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற விவரங்களும் வெளியிடப்பட வேண்டும்.

மேலும் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது. இப்போது ஒரே மட்டத்தில் உள்ளது. ஆனாலும் இதனால் உயிரிழப்பு ஏற்படும் ஆபத்துக்கள் அதே அளவில் உள்ளன- என்றார்.

(ஒ.5)



### செய்தி அறைகளில்

# ஊடகவியலாளர்களுக்கு பாலியல் துன்புறுத்தல்

## விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு.ஜுன் 23

ஊடகவியலாளர்கள் செய்தி அறைகளில் (News Room) பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகுவது தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இதுவரை அதிகாரப்பூர்வமாக முறைப்பாடு பதிவுசெய்யப்படவில்லை. எனினும் இந்த விவகாரம் குறித்து அமைச்சு ஆராயும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண் ஊடகவியலாளர்கள் சிலர், செய்தி அறையில் தங்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை சமூக ஊடகமொன்றில் பகிர்ந்துகொண்டனர். அவர்களுடைய ஆண் நண்பர்கள் சிலர் தவறான மொழியைப் பயன்படுத்துவதன் மூலமும், பொருத்தமற்ற தொடுதலினாலும் அவர்களைத் துன்புறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் உடனடி நடவடிக்கை எடுத்து, ஆண் ஊழியர் ஒருவரைப் பணி நீக்கம் செய்துள்ளார். அவர் பத்திரிகைத் துறையை விட்டு வெளியேறி மற்றொரு நிறுவனத்தில் இணைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# தேசப்பற்றாளர்கள் யார்? தேசத்துரோகிகள் யார்?

## நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கெடுப்பில் தெரியும் என்கிறார் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜுன் 23



எரிபொருள் விலையை உயர்த்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது. யார் நாட்டுப் பற்றாளர்கள்?, யார் தேசத் துரோகிகள்? என்பதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின்போது மக்கள் புரிந்துகொள்வார்கள். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வுக்கு எதிர்ப்பை வெளியிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நடத்திய போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆட்சிசெய்ய முடியாவிட்டால் ஆட்சிசெய்யத் தகுதியுடையவர்களிடம் நாட்டை ஒப்படையுங்கள். மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்காது எரிபொருள் விலையைக் குறைத்து நிவாரணங்களை உடன் வழங்குங்கள். நாட்டை அபிவிருத்தி செய்யவும், மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும், அரசுக்கு முடியா விட்டால் அதனை செய்யக்கூடியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.

மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசு மக்களை மேலும் மேலும் துன்புறுத்தி வருகின்றது. கொரோனாப் பெருந்தொற்று, வேலையில்லாப் பிரச்சினை, உரப் பிரச்சினை, பிள்ளைகளின் கல்விப் பிரச்சினை என நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படவில்லை. அரசியல் செல்வாக்கு உடையவர்கள் மட்டுமே கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்கின்றனர் - என்றார். (ஒ,5,22)

### மன்னார் இலுப்பைக்கடவையில்

# கிராம அலுவலகர் கொலை சந்தேகநபருக்குப் பிணை!

மன்னார், ஜுன் 23

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இலுப்பைக்கடவை கிராம உத்தியோகத்தராகவும் கடமையாற்றிய எஸ்.விஜியேந்திரன் என்பவரின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மன்னார் மேல்நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் தொடர்பான வழக்கு நேற்று மன்னார் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்தது.

சந்தேக நபர் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அதனை கருத்தில் கொண்டும், நாட்டில் அதி வேகமாக பரவி வருகின்ற கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டும் மன்று அவரை விடுவித்தது.

குறித்த சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், இரண்டு சரீர பிணையிலும் (இருவரில் ஒருவர் மனு தாரராகவும் இருக்க வேண்டும்) செல்ல மன்று உத்தரவிட்டதுடன், மாதத்தில் இரு ஞாயிற்றுக்கிழமைகளில் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணி முதல் 12 மணி வரையான நேரத்தில் கையொப்பமிட வேண்டும் என்று நிபந்தனையும் விதித்தது. (ம-56)

# பயணத்தடையை மீறிய குடும்பத்துக்கு நடவடிக்கை

வவுனியா, ஜுன் 23

வவுனியாவில் பயணத்தடை விதிக்கப்பட்ட கிராமத்தில் இருந்து வெளியேறிச் சென்ற குடும்பமொன்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த குடும்பத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. (ம-18)

# 18 கோடியைக் கடந்தது கொரோனா

லண்டன், ஜுன் 23

உலகளவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 கோடியைக் கடந்தது என்று உலக சுகாதார நிறுவனத்தின் இணைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 லட்சத்தைத் தாண்டியுள்ளது. அதேநேரம் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 16 கோடியே 50 லட்சத்தைத் தாண்டியுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரூ. 135 லட்சம் பெறுமதியான

# வெண்டிலேட்டர் கருவிகள் மருத்துவமனைக்கு கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 23**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு கொரோனாச் சிகிச்சைக்கு பயன்படும் மூன்று வெண்டிலேட்டர் கருவிகள் நேற்று நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.**



யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில், மத அனுஷ்டானங்கள் இடம்பெற்று வெண்டிலேட்டர் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. 13.5 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் காலமான தம்மிக பெரேராவின் தகப்பனாரான திரு கே.டி.சிரிசேன மற்றும் அவரின் மாமனாரான வில்லியம் ஆரியராஜா ஆகியோரின் நினைவாக இந்த நன்கொடை அவர்களது குடும்பத்தாரால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தம்மிக பெரேராவின் தாயாரான சுமனா முனசிங்க நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமெனக் கருதி இந்த நன்கொடை வழங்கப்பட்டது.

மிகவும் இக்கட்டான கொரோனாக் காலகட்டத்தில் மருத்துமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் வென்டிலேட்டர் கருவிகளின் தேவை மிக அவசியமானதென மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்தார். (ப-20)



### 1,00,000 மெற்றிக்தொன்

# அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஜூன் 23

ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்யும் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த பிரேரணைக்கே அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சந்தையில் ஒரு கிலோ சம்பா அரிசி 145 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. எனவே அரிசியை இறக்குமதி செய்யாமல் உள்ளூர் சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்த முடியாது என அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.4)

### வேலியே பயிரை மேய்ந்த கதை

# கடத்தல்காரர்களுக்கே ஹெரோய்ன் விற்பனை

கொழும்பு,ஜூன் 23

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருள், கடத்தல்காரர்களுக்கே மீள் விற்பனை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேலும் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சிறி ராகல முன்னிலையில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் சார்ஜன் , கான்ஸ்டபிள் ஆகியோர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் மூவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த விவகாரத்தில் ஏற்கனவே சுமார் 20 பேர் வரை கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதனைவிட மேலும் 8 பேர் தடுப்புக் காவலில் தொடர்ந்தும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வருடம் ஜூன் மாதம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தென் மாகாணத்தில் முன்னெடுத்த சுற்றிவளைப்புக்களின்போது கைப்பற்றப்பட்டது எனக் கூறப்படும் சுமார் நூறு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைப்பொருள், மீள போதைப்பொருள் வர்த்தகர் ஒருவருக்கே விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் சி.ஐ.டி.விசாரணைகளை ஆரம்பித்தது. தொடர்ச்சியாக பலர் கைது செய்யப்பட்டனர். (ஒ.4)

# லஞ்சீற் பாவனை முற்றாகத் தடை

கொழும்பு.ஜூன் 23

சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள அனைத்து வகையான லஞ்சீற்களையும் தடை செய்யுமாறு, சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். சுற்றுச்சூழல் அமைச்சில் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லஞ்சீற்தாள்களைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் சில நிறுவனங்கள் விரைவில் உக்கும் லஞ்சீற்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்று கூறியிருந்தன. ஆனால் அந்த முடிவு முறையாக செயற்படுத்தப்படவில்லை.

தற்போது உலகில் எந்த நாடும் லஞ்சீற்களைப் பயன்படுத்துவதில்லை. அதனைப் பயன்படுத்தும் ஒரே நாடு இலங்கை தான். கிடைக்கக்கூடிய தகவல்களின் படி, நான்கு பெரிய நிறுவனங்கள் மாதத்துக்கு 7 தொடக்கம் 8 தொன் லஞ்சீற்றுகளை உற்பத்தி செய்கின்றன. அதற்கமைவாக நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 106 தொன் லஞ்சீற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நாளைக்கு சூழலில் வெளியேற்றப்படும் லஞ்சீற்றுக்களின் அளவு குறைந்தது 10 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த லஞ்சீற் மண்ணில் சிதைந்து இரண்டு மூன்று ஆண்டுகளில் மறைந்துவிடும். இருப்பினும், லஞ்சீற் காரணமாக மண்ணில் சேரும் மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் 200 ஆண்டுகளுக்கும் மேலாக நீடிக்கும் என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தொடர்புடைய நிறுவனங்கள் லஞ்சீற்றுக்கு மாற்றுகளை அறிமுகப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவை நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், சில நிறுவனங்கள் லஞ்சீற் உற்பத்தி இயந்திரங்களை வீட்டுத் தொழிலாக ஊக்குவித்து வருவதால், இந்த நாட்டில் தயாரிக்கப்படும் லஞ்சீற் குறித்த துல்லியமான தகவல்களைப் பெறுவது கடினம். கடந்த காலங்களில் சுற்றுச்சூழல் அமைச்சு லஞ்சீற்றைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளதால், புதிய வர்த்தமானி அறிவிப்பை வெளியிடாமல் உத்தரவு பிறப்பிக்க முடியும்- என்றார். (4)



# வேலணையிலும் கரையொதுங்கியது கடலாமை

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம் வேலணை, துறையூர் கடற்கரையில் நேற்றுமுன்தினம் இறந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்றுக்காலை குறித்த பகுதிக்கு வந்த அதிகாரிகள் கடலாமையை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக எடுத்துச்சென்றுள்ளனர். (ப-20)

# பயணத் தடையில் நடமாடிய மூன்று பேருக்குத் தொற்று



சாவகச்சேரி,ஜூன் 23

வீதியால் சென்ற மூவர் உள்ளிட்ட ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பயணத்தடை வேளையில் கைதடி நகரப் பகுதியில் நடமாடிய 101 பேருக்கும், நாவற்குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 167 பேருக்கும் எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவர்களின் ஆய்வு அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியானது. இதில் கைதடி நகரப் பகுதியில் நடமாடிய மட்டுவில் சந்திரபுரம், கோப்பாய் மத்தி மற்றும் சங்கரத்தை வட்டுக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவருக்கும், நாவற்குழி கோவிலாக்கண்டி, கைதடி ஆயுர்வேத மருத்துவ மனை விடுதி போன்றவற்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இருவர் ஆகிய ஐந்து பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணக் கட்டுப்பாடுகள் தளர்வு ஒரே நாளில் 11 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜுன் 23

நாட்டில் நடைமுறையிலிருந்த பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட முதல் நாளே வீதி விபத்துக்களால் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.



விபத்துக்களில் பாதசாரிகள் இருவர், மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற அறுவர், சைக்கிளில் சென்ற இருவர் மற்றும் பாரவூர்திச் சாரதி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.
பயணக் கட்டுப்பாடுகளால் வீதி விபத்துக்களும் அதிகளவு தவிர்க்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் விபத்துக்க ளும் அதிகரித்துள்ளன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களாலேயே 11 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே வாகனச் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஒ.4)

## கசிப்பு விற்பனை; ஒருவர் கைது



சாவகச்சேரி,ஜுன் 23
கச்சாய் வாகையடி பகுதியில் கசிப்பு விற்பனைசெய்த குற்றச்சாட்டில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
கசிப்பு விற்பனை இடம்பெறுகிறது என மதுவரி நிலையத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 2 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தியபோது பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டது. (ஜ-9)

## தமிழர் போராட்டத்தை இழிவுபடுத்தும் தொடர்

### பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜுன் 23
ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைத் திரிவுபடுத்தியும், தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டை இழிவு படுத்தியும் தயாரிக்கப்பட்டுள்ள 'த பமிலி மேன் 2' திரைத் தொடருக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரிட்டன் வாழ் தமிழ் உறவுகள் அமெசன் நிறுவனத்தின் லண்டன் தலைமையகத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்
உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்துள்ளன. அவற்றை இழிவுபடுத்தும் உரிமை எவருக்குமில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
இந்த திரைத்தொடருக்கு சமூக வலைத்தளங்களிலும் கடும் எதிர்ப்பு வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.4)



## வவுனியாவில் இரு காவலரண்கள் பொலிஸ் நிலையங்களாக மாற்றம்

வவுனியா,ஜுன் 23
வவுனியா சிதம்பரபுரம் மற்றும் நெளுக்குளம் பகுதிகளில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண்கள் இரண்டும் பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
பொதுமக்கள் முறைப்பாடுகள் வழங்கும் செயல்முறையை இலகுவாக்குவதற்காக நாடு முழுவதும் 197 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார் .
இதன்படி வவுனியாவில் சிதம்பரபுரம் மற்றும் நெளுக்குளம் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரண்கள் இவ்வாறு புதிய பொலிஸ் நிலையங்களாக தரமுயர்த்தப்படவுள்ளன.
வவுனியா தலைமை பொலிஸ் நிலையங்களில் இணைப்பு செய்யப்பட்டிருந்த குறித்த இரு பொலிஸ் காவலரண்களும் தனியான பொலிஸ் நிலையங்களின் உட்கட்டமைப்புக்களை உள்ளடக்கி அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பி டத்தக்கது. (ஜ-110)

## சில கிராமங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு,ஜுன் 23
இரண்டு மாவட்டங்களில் மேலும் சில கிராமங்கள் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக இரத்தினபுரி மாவட்டத்தில் கொட்டாவல கிராம சேவகர் பிரிவு மற்றும் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ சிறி ஆனந்தாராம வீதி ஆகியவை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை கம்பஹா மாவட்டத்தில் உள்ள மஹபாகே பொலிஸ் பிரிவில் உள்ள கெரங்கபொகுனா ஜோர்ஜ் வீதி நேற்று முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

## மூழ்கும் கப்பலில் ரணில் கால் வைக்கார்

### ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு,ஜுன் 23
அரசு எனும் கப்பல் மக்களின் நம்பிக்கையை இழந்து தற்போது மூழ்கிக் கொண்டிருக்கின்றது. மூழ்கும் கப்பலில் ரணில் விக்ரமசிங்க கால் வைக்கமாட்டார். மாறாக எதிர்க்கட்சியின் கடமையைச் சரியாக மேற்கொண்டு, அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஒன்றை அமைப்பதே அவரது இலக்கு.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் கித்சிறி மஞ்சநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்பும் வகையில், கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றுக்குச் செல்கிறார். நாடாளுமன்றம் செல்ல அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. என்றாலும் கொவிட் பரவலை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அவர் அரசுக்கு ஆரம்பத்திலேயே அறிவுறுத்தி இருந்தார். என்றாலும் அரசு அதனைக் கண்டு கொள்ளவில்லை. தற்போது நாடு மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இவ்வாறான நிலையில் நாடாளுமன்றத்துக்குச் சென்று இது தொடர்பில் குரல் கொடுக்கவேண்டும் என்ற நோக்கிலே அவர் நாடாளுமன்றம் செல்லத் தீர்மானித்தார். நாட்டின் எதிர்க்கட்சியும் அரசுக்கு முறையான அழுத்தங்களை கொடுப்பதற்குத் தவறி இருக்கின்றது. அரசியல் முதிர்ச்சியும், அனுபவமும் உள்ள ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றுக்கு வருவதை எதிர்க்கட்சி தங்களுக்குப் பெரும் சக்தியாகவே பார்க்க வேண்டும் என்றார். (ஐ-4)

## சமுர்த்தி திணைக்களத்தால் விவசாயிகளுக்கு உபகரணங்கள்

சாவகச்சேரி,ஜுன் 23
சமுர்த்தி உதவி பெறும் விவசாயிகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சமுர்த்தி திணைக்களத்தால் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.
இதன்படி நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பவை வழங்கப்படவுள்ளன.
இதற்கு யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளில் சமுர்த்தி நிவாரணம் பெறும் விவசாயக் குடும்பங்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு பிரதேச சமுர்த்தி அலுவலகங்களிடம் திணைக்களத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-9)



## வவுனியாவில் 55 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

வவுனியா, ஜுன் 23
வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் மற்றும் சகாயமாதாபுரம் பகுதிகளில் 55 பேருக்கு நேற்று எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.
வவுனியா சகாயமாதாபுரம் வைரவர் கோவிலடியைச் சேர்ந்த பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கொவிட் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளதுடன் அப் பகுதியைச் சேர்ந்த 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.
இதனையடுத்து குறித்த பகுதியில் முற்றாக பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் வீதியில் நின்றோர் மற்றும் வீடுகளில் இருந்தோர் என 55 பேருக்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் முடிவுகளையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஜ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















# எரிபொருள் விலையேற்றம் : எதிர்க்கட்சிகள் போராட்டம்

நாட்டில் எரிபொருள் விலை உயர்த்தப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

மோட்டார் சைக்கிள், ஓட்டோ, உழவு இயந்திரம், பெக்கோ, லாண்ட்மாஸ்ரர் ஆகிய வாகனங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்தனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண டிக்கும் வகையில் பல்வேறு பதாகைகள் மற்றும் கோஷங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பினர்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த நல்லாட்சி அரச ஆட்சிக் காலத்தில் எரிபொருள் விலையேற்றப் பட்டதைக் கண்டித்து அப்போதைய எதிர்க்கட்சியினரான தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்கள் ஸ்சைக்கிள்கள் மற்றும் மாட்டு வண்டில்களில் நாடாளுமன்றம் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.4.22)

# பருவகால பயணச்சீட்டு தொடர்பில் இ.போ.ச.சலுகை வழங்கவேண்டும்

## பயணிகள் கோரிக்கை

சாவகச்சேரி,ஜூன் 23

மே மாதத்தில் அரச பஸ் சேவை நிறுத்தப்பட்டதால் பருவகால பயணச்சீட்டை பெற்றவர்கள், ஜூன் மாதத்தின் மிகுதி நாள்களில் பயன்படுத்த இ.போ.ச. நிர்வாகம் சலுகை வழங்க வேண்டும் என்று அரச அலுவலர்கள் உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பலர் மாதாந்தம் அரச பஸ்ஸில் பயணிப்பதற்காக பருவகால பயணச்சீட்டுப் பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த மாதம்(மே) 21 ஆம் திகதியுடன் பயணத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டதால் பயணச்சீட்டை பயன்படுத்த முடியவில்லை. பயணத்தடை நேற்றுமுன்தினம் தளர்த்தப்பட்டு அரச பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த மே 21 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய பயணச்சீட்டை ஜூன் 21 தொடக்கம்30 ஆம் திகதி வரை பயன்படுத்த பஸ் நிர்வாகத்தினர் அனுமதிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-ஜ)

# காடுகளை அழித்து காணி அபகரிப்பு; புதுக்குடியிருப்பில் எண்மர் நேற்று கைது

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, திம்பிலி பகுதியில் அரச காடுகள் அழிக்கப்பட்டு அபகரிக்கப்பட்டமை தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்நத 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.



நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் திம்பிலி குளத்துக்குச் சொந்தமான பகுதி மற்றும் அதனை அண்டிய காட்டுப்பகுதிகள் ஆகியவற்றில் கனரக இயந்திரம் கொண்டு அரச காடுகள் அழிக்கப்பட்டு, நிலம் அபகரிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் கோம்பாவில் கிராம அலுவலரால் அடையாளப்படுத்தப்பட்ட நபர்களின் பெயர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கப்பட்டு, முறைப்பாடு செய்யப்பட்டது. இதேவேளை திம்பிலி குளத்தின் கமக்கார அமைப்பினர் மற்றும் புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் திணைக்களத்தினரும் தமது பதிவில் உள்ள குளத்தின் காணி அபகரிக்கப்பட்டுள்ளதுடன் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். இதன் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்த பொலிஸார், சிலரை நேற்று விசாரணைக்கு அழைத்தனர். விசாரணைகளின் பின்னர் எண்மர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிச் சந்தேகநபர்களை விடுவிப்பதற்கு ஆதரவு

## பிரேரணையை வரவேற்றார் பொன்சேகா



**கொழும்பு, ஜூன் 23**

**புலிகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுவிப்பது தொடர்பான பிரேரணையை வரவேற்கின்றோம். அதற்கான நடவடிக்கை நேர்மையுடன் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்.**

இவ்வாறு இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதியும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். இது தொடர்பில் நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் நாமல் ராஜபக்ச முன்வைத்த கோரிக்கையை வரவேற்கின்றோம். 2010 ஆம் ஆண்டில் என்னை வெலிக்கடை சிறைச்சாலையில் அடைத்தனர். அதன்பின்னர் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் சென்றேன். அப்போது ஏனையவர்களும் அழைத்து வரப்பட்டனர். எனக்கு எதிராக தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கான குண்டை கொண்டுவந்த இளைஞர் எனக்கு அருகில் அமர்ந்திருந்தார். இருவரும் கதைத்தோம். தற்போதும் இடையிடையே தொலைபேசியில் பேசுவார்.

மொரிஷ் என்ற குறித்த இளைஞருக்கு இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. அவர் 15 வருடங்களாக சிறைச்சாலையில் இருக்கின்றார். அந்தத் தண்டனையே அவருக்குப் போதும். எனவே அமைச்சரின் யோசனையை வரவேற்கின்றோம். அதற்கான நடவடிக்கை வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெற்றால் எமது ஒத்துழைப்பும் நிச்சயம் வழங்கப்படும்- என்றார். (ஒ-4,44)

# பயங்கரவாத தடைச்சட்டம் விரைவில் திருத்தப்படும்

## நீதி அமைச்சர் உறுதி

கொழும்பு,ஜூன் 23



பயங்கரவாத தடைச்சட்டம் விரைவில் திருத்தப்படும். சர்வதேசத்தின் தேவைக்கு ஏற்ப அல்ல. எமது நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சட்டம் திருத்தப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்சவின் உரையின் பின்னர் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ச முக்கியமானதொரு பிரச்சினையை சுட்டிக்காட்டியிருந்தார். புலிகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தடுப்பு உத்தரவு அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிலருக்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும், அந்தத் தண்டனை காலத்தை விடவும் அதிக வருடங்கள் அதற்கு முன்னர் சிறையில் இருந்துள்ளனர் என்பது தெரியவந்தது. எனவே, இந்த விடயத்தில் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை நாம் தீர்க்க வேண்டும். அமைச்சரின் கோரிக்கை தொடர்பில் பரீசிலித்து, நீதியைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். நாம் அனைவரும் இலங்கையர்கள். எனவே, இதனை அரசியல் மயப்படுத்தக்கூடாது. வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடினேன். வழக்குத் தொடராவிட்டால் அவர்களை நீண்ட காலமாக சிறையில் வைத்திருக்க முடியாது. ஒன்று வழக்குத் தொடுக்க வேண்டும். இல்லையேல் விடுவிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையில் தான் அரசு செயற்பட்டு வருகின்றது. அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுசீரமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும்- என்றார். (ஒ-4,44)

> **வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும். வழக்குத் தொடராவிட்டால் அவர்களை நீண்ட காலமாக சிறையில் வைத்திருக்க முடியாது. ஒன்று வழக்குத் தொடுக்க வேண்டும். இல்லையேல் விடுவிக்கப்படவேண்டும்.**



# புறக்கோட்டைக்கு மீண்டும் பூட்டு?

கொழும்பு,ஜூன் 23

புறக்கோட்டை கொழும்பு பிரதான வீதியில், அத்தியாவசிய பொருள்கள் விநியோகிக்கும் கடைகளைத் தவிர ஏனைய அனைத்துக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாத காலமாக நாட்டில் பயணத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் சில கட்டுப்பாடுகளுடன் பயணத்தடை தளர்த்தப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் புறக்கோட்டைப் பகுதியில் கள நிலவரங்களை ஆராய்ந்த பொலிஸார், இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,4)

# 46 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,ஜூன் 23

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளைப் பகுதியில் உள்ள 46 குடும்பங்களுக்கு இடர்கால உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் உறவுகளான அரிச்சந்திரன் ரூபினி, அரிச்சந்திரன் நிரோஜன் ஆகியோர் அமரர் கமலத்தின் நினைவாக இந்த உதவியை வழங்கியுள்ளனர்.

இரத்தினராசா சரோஜாதேவியின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் திவாகர் குருக்கள் மற்றும் கிருசாந்தன் சர்மா உள்ளிட்ட இந்துமதக் குருக்கள் கலந்துகொண்டனர். (ஐ-246)



# கூட்டணிக் கட்சிகளுக்கு தொடரும் அழுத்தங்கள்

## பாதிப்பை ஏற்படுத்தும் என்கிறார் ஜயந்த எம்.பி.

கொழும்பு,ஜூன் 23

அர கூட்டணிக் கட்சிகளுக்கு, கடும் அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

1956 ஆம் ஆண்டு தேசப்பற்று என்ற பயணம் பண்டாரநாயக்க கொலைசெய்யப்பட்டதும் நிறுத்தப்பட்டது. 1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசு கொண்டுவந்த தேசிய பொருளாதாரக் கொள்கையும் தோல்வியடைந்தது. கலாநிதி என்.எம்.பெரேரா உள்ளிட்ட இடதுசாரிகள் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டமையே இதற்குக் காரணமாக அமைந்தது.

இந்த நிலையில் தற்போதைய அரசுக்குள்ளும் அதேபோன்ற சம்பவங்களே நடந்து வருகின்றன.

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்று சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, நாட்டில் காணப்படும் சவாலை வெற்றிகொள்ள கோத்தாபயவைத் தவிர வேறு தகுதியான நபர் இல்லை என்ற நிலைப்பாட்டை மக்களுக்குக் கொண்டு சென்றவர்கள் விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர்.

இப்படியானவர்கள்மீது தாக்குதல் தொடுக்கும் நிலைமையானது மிகவும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும்- என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நல்லது: செயற்படுக!

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றவாறாக வலியுறுத்தியுள்ளார் அமைச்சர் நாமல் ராஜபக்ச. நாமலின் இந்தக் கோரிக்கைக்கு தாம் எந்த எதிர்ப்பையும் வெளிப்படுத்தப்போவதில்லை என்றும் மனிதாபிமான அடிப்படையில் உரிய பொறிமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார் பிரதான எதிர்க்கட்சியின் முக்கியஸ்தரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

போரின் பின்னர் முன்னாள் போராளிகள் பலர் அரசால் மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். சுமார் 12 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளுக்கு இவ்வாறு மறுவாழ்வு வழங்கப்பட்டது. ஆனால், துயரம் என்னவென்றால், 'விடுதலைப் புலிகளுக்கு மறுவாழ்வு வழங்கி அவர்களை சமூகத்துடன் இணைத்தோம்' என்று சர்வதேசத்துக்கு தம்பட்டம் அடிக்கும் கொழும்பு, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட பலரை குறைந்தபட்சம் நீதிமன்றப் பொறிமுறைகளுக்குக்கூட உட்படுத்தாமல் பல ஆண்டுகளாக - தசாப்தங்களுக்கு மேலாக சிறையிட்டுள்ளது.

அவர்களை விடுவிக்க வேண்டும். சமூக மயப்படுத்தப்பட்டு சாதாரணமான ஒரு வாழ்க்கையை அவர்கள் வாழ்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவ்வப்போது குரல்கள் எழுவதும், பின்னர் அந்தக் குரல்கள் அப்படியே அஸ்தமித்துப்போவதும் தொடர்கதை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை என்று சொல்வதைப்போன்றுதான், அரசியல் கைதிகளின் விடயத்திலும் அரசு தன் இறுக்கப்போக்கைக் கடைக்கொண்டிருக்கின்றது. அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பாரதூரமான குற்றங்களை இழைத்தவர்கள் என்றவாறான பதில்களைத்தான் இவர்களின் விடயத்தில் கொழும்பு இதுகாலும் தந்துள்ளமை வரலாறு.

இத்தகையதொரு பின்னணியில் மீண்டும் ஒரு தடவை அரசியல் கைதிகளின் விவகாரம் பேசுபொருள் ஆகியிருக்கின்றது. ஆனால், தமிழ்த் தேசியத் தரப்பால் அல்லாமல் அரச தரப்பின் முக்கியஸ்தரும், ராஜபக்ச குடும்பத்தின் மூன்றாம் தலைமை என்று அடையாளப்படுத்தப்பட்டவரும், அமைச்சருமான நாமல் ராஜபக்சவிடம் இருந்து இம்முறை இந்தப் பேச்சு எழுந்துள்ளது.

அதேநேரம் நாமல் ராஜபக்ச, இத்தகையதொரு கருத்தை முன்வைப்பதும் இதுவொன்றும் முதல்முறையல்ல. 2018ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக ஆட்சியமைத்திருந்த காலத்திலும் (ஒக்டோபர் புரட்சியின்போது) இந்தக் கருத்து நாமலால் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால், அரசியல் சதிகளாலும், சந்தரப்பவாதப் போக்குகளாலும் அந்தக் கோரிக்கை அப்படியே அஸ்தமித்திருந்தது. எனவே அதுபோன்று இம்முறையும் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களின் வேணவாவாக உள்ளது.

புலிச் சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேற்படி உறவுகள் சில வாரங்களையோ அல்லது சில மாதங்களையோ சிறையில் செலவிடவில்லை. மாறாக 7, 10, 15 என்று வருடங்களில் நீண்டுசெல்கின்றது அவர்களின் சிறைவாசம். எனவே, தமது தவறுக்கான தண்டனைகளை அவர்கள் அனுபவித்துவிட்டார்கள் என்ற கண்டோட்டத்தில் அனைவரையும் நிபந்தனை இல்லாமல் விடுவிக்க வேண்டும் என்பதையே தமிழர் தாயகம் தற்போது வேண்டி - விரும்பி - காத்திருக்கின்றது.

'யார் குத்தினாலும் அரிசி ஆனால் சரி' என்பதே தமிழர்களின் தற்போதைய நிலைப்பாடு. அதுவே நிகழ்கால யதார்த்தமும்கூட.



# கம்மன்பிலவுக்கு எதிரான பிரேரணை கையளிப்பு



**கொழும்பு,ஜூன் 23**

**எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான, நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல, சபாநாயகரிடம் கையளித்தார். (ஒ.4)

# தமிழர்களின் அனுமதியின்றி காணிகளை வழங்கக்கூடாது

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

'தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக வடக்கு, கிழக்கில் எந்தவொரு பகுதியும் வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன அபிவிருத்தி திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'போரின் பின்னர் வடக்கு, கிழக்கில் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் படையினரால் பல ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக் காணிகளில் சில பகுதிகள் சீனாவுக்கு குத்தகைக்கு வழங்க தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ். கீரிமலைப் பகுதியில் உள்ள ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் எந்தவொரு பகுதியையும் தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது. தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடமே மீளக் கையளிக்க வேண்டும் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்' - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண அதிகாரத்தில் மத்தி தலையிட முடியாது

## கூட்டமைப்பு திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 23

வடக்கு மாகாணத்தில், மாகாணசபையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளின் நிர்வாக அலகை முழுமையாக மத்திய அரசு பொறுப்பேற்கும் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவருவதற்கான அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களுக்குமுரிய மருத்துவமனைகளையும் பொறுப்பேற்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் நீண்டகாலமாக அபிவிருத்திப் பணிகள் மாகாண சபை ஊடாகவே இடம்பெற்று வந்துள்ளன. மத்திய அரசும், நிதிப் பங்களிப்பு வழங்கியுள்ளது. தொடர்ந்தும் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?

மருத்துவமனைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் இதன் பின்னணியில் இல்லை. மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனையின் நிர்வாக அலகை முழுமையாக மத்திய அரசுக்கு மாற்றிய பின்னர், புனரமைப்பு இடம்பெறும் என்று கூறப்படுவதை எமது மக்கள் ஏற்கவில்லை. அரசுடன் இருக்கும் அரசியல்வாதிகளும் ஏற்கமாட்டார்கள். எனவே இது தொடர்பில் சுகாதார அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (ஒ.4,44)

# வடக்கின் மாகாண மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கமாட்டோம்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு,ஜூன் 23

**வடக்கு மாகாணத்தில், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் மாவட்ட மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்கீடு எதையும் வழங்கமாட்டோம் என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட மருத்துவமனைகளை மத்திய அரசுக்கு வழங்குவதற்கு மாவட்டங்கள் விரும்பவில்லையெனில், அவற்றை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். அதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது. எனினும், எமது சுகாதார அமைச்சால், மாகாண மருத்துவமனைகளுக்கு நிதி வழங்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-4,44)

# முழங்காவில் வித்தியில் கட்டடத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்பக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ப.ஆனந்தராசா கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார். 40.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இருமாடிக் கட்டடமாக இது அமையவுள்ளது.

பாடசாலையின் தொழிநுட்பத் துறை மாணவர்கள் செய்முறை வகுப்புகளுக்காக இதுவரை கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. புதிய கட்டடம் மூலம் குறித்த குறைபாடு நீக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு உயர்தரத்தில் தொழிநுட்பப் பிரிவில் மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற முழங்காவில் மகாவித்தியாலய மாணவியும் நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)





# டெல்டா வைரஸுடன் பெண்ணொருவர் அடையாளம்

கொழும்பு,ஜூன் 23

கொழும்பில் டெல்டா வைரஸ் தொற்றுடன் பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் மாதிவெலப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார். தற்போது அதே பிரதேசத்தைச்சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும் இந்தத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, அல்பா திரிபு வைரஸுடன் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி மருத்துவர் ருபன் விஜயமுனி தெரிவித்துள்ளார். (ஒ-4)

# தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் பயணத் தளர்வு நாள்களில் அவதானம்

## மன். சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

மன்னார், ஜூன் 23

பயணத்தடை தளர்வு நாள்களில் மீன்பிடி வாடிகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற நெருக்கமான இடங்களில் பணிபுரிவோர் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வினோதன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 10 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களோடு சேர்த்து இந்த மாதம் 159 பேரும், இந்த இந்த வருடம் 649 பேரும் மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 666 பேரும் தொற்றால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புத்தாண்டுக் கொத்தணியோடு தொடர்புபட்ட நபர்கள் இளவயது உடையவர்களாகவும், தொழில் புரிபவர்கள் ஆகவும் காணப்படுகின்றனர். அத்தோடு புத்தாண்டுக் கொத்தணியோடு தொடர்புபட்டவர்கள் 49 பேர் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் ஆவர். பயணத்தடை தளர்வு நாள்களில் மீன்பிடி வாடிகள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற நெருக்கமான இடங்களில் பணிபுரிபவர்கள் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து உங்களுடைய கடமைகளைச் செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அத்தோடு இவர்களுக்கு ஏதேனும் குணங்குறிகள் தென்பட்டால் உங்களை நீங்களே வீடுகளில் சுய தனிமைப் படுத்திக்கொண்டு. பின்னர் சுகாதாரத் துறையினருக்கு அறிவியுங்கள் - என்றார். (ப-213)

# முல்லையின் ரூபா 6 மில்லியன் திறைசேரிக்குத் திரும்புகின்றது

## கரைதுறைப்பற்று தவிசாளர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சாரதிகளுக்கான விடுதி அமைப்பதற்கான ரூபா 6 மில்லியன் நிதி விடுதி அமைக்கப்படாது திரும்புகின்றது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; மாவட்ட பொது மருத்துவமனையில் சாரதிகளுக்கான விடுதி இல்லை. மாவட்ட பொது மருத்துவனையின் நிர்வாகத்தால் சுகாதார அமைச்சிடம் பல்வேறு தடவைகள் விடுதிகள் அமைப்பதற்கான கோரிக்கைகள் அனுப்பப்பட்டன. மாகாண சுகாதார அமைச்சில் பல வழிகளில் நிதிகளை ஒதுக்கி இருந்தாலும் கூட விடுதிகள் அமைப்பதற்கான அனுமதிகள் மாவட்ட மருத்துவமனை நிர்வாகத்துக்கு கிடைக்கப்பெறவில்லை. கட்டம் கட்டமாக ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 6 மில்லியன் ரூபா நிதி தற்போது திறைசேரிக்கு திரும்புகின்றது என்ற தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. மாவட்ட பொது மருத்துவமனைக்கு நிதி இருக்கும்போது வேலைத் திட்டங்களை அனுமதிக்காமல் மாகாண சுகாதார அமைச்சு இழுத்தடிப்புகளை மேற்கொண்டதன் காரணமாகவே சாரதிகளுக்கான விடுதியை தற்போது அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை மாகாண சுகாதார அமைச்சு ஒரு மாவட்ட மருத்துவமனையின் சாரதிகளுக்கான விடுதிக் கட்டடங்களை அமைப்பதற்கு உரிய காலங்களில் அனுமதிகளை வழங்கி நிதியை ஒதுக்காததால் தற்போது சாரதிகளுக்கான விடுதி அமைக்காமல் நிதி திரும்புகின்றது. இதற்கான முழு [illegible]றுப்பையும் மாகாண சுகாத[illegible] அமைச்சின் அதிகாரிகள் தான் ஏற்கவேண்டும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரு வாரங்களின் பின்னர் நாட்டுக்கு பெரும் ஆபத்து

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு,ஜூன் 23**

**நாட்டில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் விளைவை, அடுத்த இரண்டு வாரத்துக்குள் எதிர் கொள்ள நேரிடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண தெரிவிக்கையில், நீண்ட நாள்களுக்குப் பின்னர் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்கள் நடந்து கொண்ட விதம் கவலையளிக்கின்றது. டெல்டா வைரஸ் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நேரத்தில் மக்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஒரு மாதத்தின் பின்னர் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், பல இடங்களில் பொதுமக்கள் பெருமளவில் கூடியுள்ளனர். தேவையற்ற விதத்தில் நடமாடுவதையும் அவதானிக்க முடிகின்றது. எனவே இதன் விளைவை அடுத்த இரண்டு வாரங்களில் அறிந்து கொள்ள முடியும்- என்றார். (ஒ.4)

# சுதத் சமரவீரவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு




கொழும்பு,ஜூன் 23

தொற்றுநோயியல் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர மற்றும் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பானவர்கள் உள்ளிட்ட சிலருக்கு எதிராக, பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா உயிரிழப்புக்கள் தொடர்பில் தவறான புள்ளி விபரங்களைச் சமர்ப்பித்ததன் மூலம், அதன் சட்ட ரீதியான கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளனர். இவர்களால் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

அதனடிப்படையில் சட்டத்தரணி அருண லக்சிறி உணவடுன, இலங்கை தண்டனை சட்டப்பிரிவு 289 இன் கீழ் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார்.

அண்மைக்காலத்தில்- வெளியிடப்பட்ட இறப்பு விபரங்கள், கொரோனா வைரஸால் ஏற்பட்டவையா?, வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்கள் சரியானவையா? என்பதை அறிவதற்கு உடன் விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (ஒ.4)

# லொத்தர் சபைக்கு புதிய தலைவர்

கொழும்பு,ஜூன் 23

அபிவிருத்தி லொத்தர் சபையின் புதிய தலைவராக அனுஷ பெல்பிட்ட நியமிக்கப்பட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய அனுஷ பெல்பிட்ட பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு, ஜனாதிபதியிடம் அனுமதி கோரியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவருக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அனுஷ பெல்பிட்ட முன்பு பல அரச நிறுவனங்களிலும் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். (ஒ.4)



# மஹிந்த தம்பதிக்கு இந்தியா பாராட்டு

கொழும்பு,ஜூன் 23

பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது பாரியார் ஷிராந்தி ராஜபக்ச ஆகியோருக்கு, இந்தியா பாராட்டு தெரிவித்துள்ளது.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, இருவரும் யோகாசனம் செய்யும் படமொன்றை வெளியிட்டு, இந்தியத் தூதரகம் நன்றி தெரிவித்துள்ளது.

யோகாவை உங்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றுவதைக் காண மில்லியன் கணக்கான யோகா ஆர்வலர்கள் தொடர்ந்தும் ஆர்வமாகயிருப்பார்கள் என்று இந்தியத் தூதரகம் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. (ஒ.4)





# ரணில் –விமல் அரசியல் டீல்

கொழும்பு,ஜூன் 23

அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அரசியல் ஒப்பந்தமொன்று உருவாகியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மூன்றாம் தரப்பொன்றின் முயற்சிகள் காரணமாக, இருவருக்கும் இடையில் இணக்கப்பாடொன்று ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரபல பௌத்த மதகுரு ஒருவரே, இருவருக்கும் இடையில் அரசியல் ஒப்பந்தமொன்று உருவாவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் கூட்டணியின் பொதுவேட்பாளராக விமல் வீரவன்சவை நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க சம்மதித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றுக்குச் செல்வதில்லை என்று உறுதியான தீர்மானத்துடன் காணப்பட்ட முன்னாள் பிரதமர் அந்த முடிவை மாற்றியுள்ளமை தற்செயலான விடயமில்லை.

எதிர்காலத்தில் எதிர்பார்க்காத பல அரசியல் மாற்றங்கள் நிகழக்கூடும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

# அனைத்திலும் அரசுக்கு தோல்வி

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 23

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உட்பட அனைத்து விடயங்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் சுற்றாடலுக்கும், வளத்துக்கும் ஏற்பட்ட அழிவின் அறிகுறிகளாகவே, கரையோரங்களில் உயிரிழந்த நிலையில் கடல்வாழ் உயிரினங்கள் மீட்கப்படுகின்றன.

ஆமைகள், மீன்கள் ஏன் உயிரிழக்கின்றன என்பது தொடர்பில், அது தொடர்பான நிபுணத்துவம் உடையவர்களே அறிவிக்க வேண்டும். ஆனால், நாலக கொடஹேவா, டக்ளஸ் மற்றும் சமல் ராஜபக்ஸ ஆகியோர் தமக்கே அனைத்தும் தெரிந்ததைப் போன்று பதிலளிக்கின்றனர். கப்பலிலிருந்து வெளியேறிய இரசாயனம் மற்றும் அதிக உஷ்ணம் காரணமாகத்தான் கடல்வாழ் உயிரினங்கள் உயிரிழக்கின்றன என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். தமக்கு மட்டும் தான் எல்லாம் தெரியும் என்ற தலைவீக்கத்தில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் அனைத்துக்கும் பதிலளிக்கத் தொடங்கியுள்ளனர். நாட்டைத் திறப்பது தொடர்பில், வை... தாரத் தரப்பினரை அடிப்படையாக வைத்து, தீர்மானங்களை எடுத்திருக்க வேண்டும். பெயருக்காக மட்டுமே நாடு மூடப்பட்டிருந்தது. இவ்வாறு அனைத்து விடயங்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து;

# தெற்கு மீனவருக்கு வழங்கும் சலுகையை மன்னார் மீனவர்களுக்கும் வழங்குங்கள்

*மாவட்ட மீனவப் பெண்கள் கோரிக்கை*



**மன்னார், ஜூன் 23**

**கொரோனாப் பயணத்தடை மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மீனவர்களுக்கு வழங்கும் சலுகையை, மன்னார் மாவட்ட மீனவர்களுக்கும் விரைவாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னாரைச் சேர்ந்த மீனவப் பெண்கள் கோரிக்கை விடுத்தனர்.**

இதுதொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் பெண்களும் ஈடுபடுகின்றோம். கரையோரங்களில் மீன்பிடியில் ஈடுபடுவது, கருவாடு பதனிடுவது, மட்டி எடுத்தல் போன்ற பலவாறான வேலைகளை நாம் செய்து வருகின்றோம். இதில் கூடுதலானவர்கள், பெண் தலைமைத்துவத்தை கொண்டவர்களாகவும், பொருண்மியம் நலிவடைந்தவர்களாகவும் உள்ளோம். நாம் கிராம மட்டக் குழுக்களாக இயங்கி வாழ்வாதாரத்தை பெருக்கும் நோக்கில் செயற்பட்டு வந்தோம். கொரோனாத் தொற்றின் தாக்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பயணத்தடையால் எமது வாழ்வாதாரம் பாதிப்படைந்த இந்த நேரத்தில், அண்மையில் கொழும்பில், எரிந்த நிலையில் மூழ்கடிக்கப்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் இரசாயனக் கழிவுகளால் கடலாமைகள் திமிங்கலங்கள் மற்றும் மீன்கள் ஆகியவை இறந்த நிலையில் கரை ஒதுங்குகின்றன. இதனால் மீன்களை எவரும் சாப்பிட வேண்டாம் என்று கூறப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் கடற்கரையோரங்களில் சிறு கைத்தொழில் செய்பவர்கள், மட்டி எடுப்பவர்கள், கருவாடு பதனிடும் தொழில் செய்பவர்கள் என அனைத்து மீனவக் குடும்பங்களும் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றோம். கடலுக்கு மீன் பிடிப்பதற்குச் செல்ல முடியாது.

சில வேளைகளில் பிடித்துவரும் மீன்களை விற்பனைக்காக கொண்டு சென்றாலும் அதனைக் கொள்வனவு செய்வதற்கு அச்சப்படுகின்றார்கள்.

எனவே அரசு கொரோனாப் பயணத்தடை மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட தென் பகுதி மீனவர்களுக்கு வழங்கும் சலுகையை, மன்னார் மாவட்ட மீனவர்களுக்கும் விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப

## மருத்துவமனையில் அலைபேசிகளை திருடி தப்பிக்க முற்பட்ட இளைஞன்

*நோயாளிகள் மன்னித்ததால் பிழைத்தார்*

சாவகச்சேரி, ஜூன் 23

மருத்துவமனை விடுதியில் அனுமதிக்கப்பட்ட 21 வயது இளைஞன். விடுதியில் மின்வலுவுக்கு பொருத்தப்பட்டிருந்த சக நோயாளிகள் இருவரின் அலைபேசிகளை அபகரித்துக் கொண்டு அதிகாலையில் வெளியேற முயன்ற வேளையில் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பிடிபட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி மருத்துவமனையில் இடம்பெற்றது. நேற்றுமுன்தினம் இரவு வீதியில் வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் கொடிகாமம் பாலாவியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்த இளைஞன் அதிகாலை வேளையில் மருத்துவமனையிலிருந்து தப்பிச் செல்ல முயன்றதை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர். இளைஞனை தடுத்து விடுதி மருத்துவரிடம் அனுமதி பெற்று வெளியேறுமாறு விடுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு தமது கைபேசிகள் திருட்டுப் போயுள்ளன என்று சக நோயாளர்கள் இருவர் விடுதி மருத்துவரிடம் முறையிட்டவேளையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் அழைத்துச் சென்ற இளைஞன்மீது சக நோயாளர்கள் சந்தேகம் வெளியிட்டனர். இதனால் குறித்த இளைஞர் சோதனைக்குட்படுத்தப்பட்டார். இதன்போது அவரது உள்ளாடைக்குள் இரு அலைபேசிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. இளைஞனை பொலிஸாரிடம் ஒப்படைக்க பாதுகாப்பு உத்தியோகத்தர் முயன்ற வேளையில் நோயாளர்கள் அவரை மன்னித்து விடுவிக்கு மாறு கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து விடுதி மருத்துவரால் இளைஞன் விடுவிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். (ப-9)

## துப்பாக்கிச் சூட்டுக்கு முன்பகையே காரணம்

*பொலிஸார் தெரிவிப்பு*

கொழும்பு,ஜூன் 23

இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டின் முன்பாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் முன்பகை காரணமாக நடந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். டிப்பர் சாரதி ஒருவருக்கும், இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் இடையில் சிறிது நாள்களுக்கு முன்னர் தகராறு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் இராஜாங்க அமைச்சரின் வீட்டின் முன்பாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள், அந்த வழியாக மணல் ஏற்றிச்சென்ற குறித்த டிப்பர் சாரதியின்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது இராஜாங்க அமைச்சர் அவரது வீட்டில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)



## உயிரிழந்தவருடன் எனக்குப் பகையில்லை

*வியாழேந்திரன் விளக்கம்*

கொழும்பு,ஜூன் 23

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு, எனது தனிப்பட்ட விதமான பகையோ அல்லது கட்சி சார்ந்த அரசியலோ காரணம் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

எனது வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும், பிறிதொரு நபர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தால் காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு காலம் தாழ்த்தாது உரிய நீதியை, நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர் தனது முகப் புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். (ஒ-4)

# சாரதிகளின் ஓய்வு விடுதியை நிர்மாணிக்க ஒதுக்கப்பட்ட நிதியை உடன் விடுவியுங்கள்

*வடக்கு ஆளுநருக்கு வினோ எம்.பி அவசர கடிதம்*

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் சாரதிகள் தங்குவதற்கு என தனியான ஓய்வு விடுதியை அமைக்க ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து திட்டங்களை இவ் வருடத்துக்குள் நிறைவுசெய்து தருமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் வடக்கு மாகாண ஆளுநருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் உள்ளதாவது; முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் சாரதிகள் தங்குவதற்கு என தனியான ஓய்வு விடுதி வசதிகள் இல்லாததால் நோயாளர் காவு வண்டிகளின் சாரதிகள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று என்னிடம் முறைப்பாடு செய்தமைக்கு அமைய தங்களின் மேலான கவனத்துக்கு இவ் விடயத்தைக் கொண்டு வருகின்றேன். வடக்கு மாகாண சபையால் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய சாரதிகள் தங்குவதற்கான ஓய்வு விடுதியை நிர்மாணிக்கவென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரை ஆரம்ப கட்ட வேலைகள் கூட தொடங்கப்படவில்லை என அறிய முடிகின்றது. நோயாளர் காவு வண்டிகள் எவ்வாறு விசேட கவனம் எடுத்து பராமரிக்கப்பட வேண்டுமோ அது போலவே அதன் சாரதிகளுக்கும் முறையான ஓய்வு வசதிகளும் செய்து கொடுக்க வேண்டியது அக்கறையுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும். இவ் விடயமாக மாகாண சுகாதார திணைக்களம் உரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது சாரதிகள் அனைவரும் மருத்துவமனைப் பணிப்பாளரின் விடுதியிலேயே தற்காலிகமாகத் தங்கியிருக்கின்றனர். முல்லை. பொது மருத்துவமனைக்கு நிரந்தரப் பணிப்பாளர் நியமிக்கப்படுமிடத்து தற்காலிகமாக பணிப்பாளர் விடுதியில் தங்கியிருக்கும் சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திப்பார்கள். மத்திய அரசு இம் மாவட்ட மருத்துவமனையைப் பொறுப்பேற்க இருக்கும் காரணத்தைக் காட்டி ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட மாகாண சபை நிதியை மீளப்பெறவோ சாரதிகளின் அர்ப்பணிப்பான சேவையைக் கேள்விக்கு உட்படுத்தவோ வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம். எனவே காலம் தாழ்த்தாது முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு நிரந்தரப் பணிப்பாளரை நியமிக்குமாறும், சாரதிகளுக்கான ஓய்வு விடுதிக்கான நிரந்தர கட்டடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து திட்டங்களை இவ் வருடத்துக்குள் நிறைவுசெய்து தருமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில மாதங்களுக்கு நாடு முடக்கப்படும்?

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 23

நடைமுறையிலிருந்த பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட பின்னர், மக்கள் நடந்துகொள்ளும் அனைத்து விடங்களையும் கண்காணிக்கும்போது, நாட்டை மேலும் சில மாதங்களுக்கு முழுமையாக மூட வேண்டிய நிலை ஏற்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த போது, செய்ய முடியாமல் போன அனைத்து விடயங்களையும், கட்டுப்பாடுகளைத் தளர்த்திய பின்னர் செய்துகொள்ள முயற்சிக்கின்றனர்.

இந்த வருடத்தின் கடைசி வரை பயணக் கட்டுப்பாடுகளில் தளர்வை ஏற்படுத்துவதா அல்லது இரண்டு வாரங்களில் மீண்டும் நாட்டை மூடி வைப்பதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில், அத்தியாவசிய சேவையற்ற பலரை பணிக்கு அழைக்க நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். தற்போது கட்டுப்பாடுகள் தளர்வடைந்துள்ளன. மக்கள் உதாசீனம் செய்கின்றனர் என்றே நினைக்கின்றேன். எனவே இன்னும் சில மாதங்கள் நாட்டை முடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படலாம்- என்றார். (ஒ-4)



# தடுப்பூசி செலுத்தலில் மற்றுமொரு முறைகேடு

### விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,ஜூன் 23

**துறைமுக ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட தடுப்பூசிகள், நெருங்கியவர்கள் சிலருக்குச் செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தடுப்பூசியின் 300 டோஸ்கள், துறைமுக அதிகார சபையின் பிரதான மருத்துவ அதிகாரியால், தனது உறவினர்கள் மற்றும் நெருக்கமானவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன என்று சுயாதீன துறைமுக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுக ஊழியர்களில் 12 முதல் 13 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மீதமிருந்த சுமார் 300 டோஸ்கள் அவரின் உறவினர்களுக்கு மற்றும் நெருங்கமானவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன என்று சுயாதீன துறைமுக ஊழியர் சங்கத்தின் தலைவர் லால் பங்கமுவ தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# கொரோனா விவகாரத்தில் கொழும்பு நகரம் நெருக்கடி

கொழும்பு,ஜூன் 23

கொழும்பு நகரில் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பெரும் சவாலாக உள்ளன என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவர் ரூவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நகரில் மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இதனால் கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பான தரவுகள் பெறுவதற்குச் சிரமமாகவுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்த பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அதிக அவதானமிக்க பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு, பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ஒ,4)



# உரம்பெற வேண்டுமானால் புதிய விண்ணப்பம் தேவை

### முழங்காவில் கமநல சேவை நிலையம் அறிவிப்பு

கிளிநொச்சி ஜூன் 23

விவசாயிகளுக்கு உரம் தேவை என்றால் கமநல சேவைகள் நிலையத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை முழுமையாகப் பூர்த்திசெய்து வழங்க வேண்டும் என்று முழங்காவில் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

உரத்தைக் கொள்வனவுசெய்ய கிளிநொச்சி முழங்காவில் கமநல சேவை நிலையத்துக்கு நேற்றைய தினம் சென்ற விவசாயிகளுக்கு கமநர சேவை நிலையத்தால் புதிய விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டது. இது தொடர்பில் விவசாயிகள் விசனம் தெரிவித்திருந்தனர். "பயணத்தடை அமுலில் இருந்த காலப்பகுதியில் ஏனைய விவசாயிகளுக்கு ஏக்கர் வரி பற்றுச்சீட்டுக்கு உரம் வழங்கப்பட்டது. நேற்று நாங்கள் ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டுடன் சென்றபோது ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டுக்கு உரம் இல்லை எனவும், புதிய ஒரு விண்ணப்பப் படிவத்தைக் கொடுத்து அதைப் பூர்த்திசெய்து கொண்டு வருமாறும் முழங்கா வில் கமநல சேவை நிலையத்தி னர் எம்மைத் திருப்பி அனுப்பினர்.

புதிய படிவத்தில் பல உத்தியோகத்தர்களிடம் கையொப்பம் வாங்கினால் தான் உரம் வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் குறிப்பிட்ட அளவு உரம் தான் வழங்க முடியும் என கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்தனர்" என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக முழங்காவில் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கனகரட்ணம் கஜீவனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது;

"முழங்காவில் கமநல சேவை நிலையத்திலிருந்து பசளையை விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றோம்.

நாடளாவிய ரீதியில் பசளை தட்டுப்பாடு நிலவி வருவதால் எமது நிலையத்துக்கும் பசளையின் அளவு குறைந்துள்ளது. விண்ணப்பப் படிவத்தை கொடுத்திருக்கிறோம்.

கிராம அலுவலர், விவசாயப் போதனாசிரியர் ஆகியோரின் கையொப்பத்துடன் வந்தால் இருக்கின்ற பசளையை பங்கிட்டு வழங்குவோம்- என்றார். (ப-113)

# கொரோனா வைரஸைவிட பேரினவாதம் பயங்கரம்

### அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 23

இலங்கைக்கு வந்திருக்கின்ற கொரோனா வைரஸை விட இந்தப் பேரினவாதம் பெரும் பயங்கரமாக இருக்கின்றது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ், உயிரைப் பாதிக்கும் ஒரு பயங்கர நோயாக உருவெடுத்துள்ள இக்காலகட்டத்தில் அரசியல் கைதிகளின் மன நிலையை அது பாதிப்பதாகவும், அவர்களுடைய அரசியல் மனநிலையை கொலை செய்கின்ற ஒன்றாகவும் விளங்குகின்றது. முக்கியமாக அரசியல் கைதிகளுடைய மனநிலையை தக்கவைப்பதற்கான வெளிச் செயற்பாடுகள் எதுவுமில்லாமல் இருப்பது அவர்களுக்கு மன ரீதியாக பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

இதனைவிட அவர்களின் குடும்பங்களை நினைத்தும் , இந்தக் கொரோனாக் காலகட்டத்தில் அவர்களின் குடும்பங்களுக்கு பசியைப்போக்கக்கூடிய ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாகவும் அதைப் பற்றிய அதீத யோசனையில் உள்ளனர். இந்நிலையிலே அரசியல் கைதிகளுடைய குடும்பத்தாரை கவனிக்க வேண்டிய பொறுப்பும் ஆட்சியாளர்களின் செயற்பாடுகளில் தான் இருக்கின்றது.

இந்த ஆட்சியாளர்களுடைய செயற்பாடின் காரணமாகத் தான் மிக நீண்ட காலமாக அரசியல் கைதிகள் சமூக நீக்கம் செய்யப்பட்டு இருக்கின்றார்கள். குடும்ப உறவுகளில் இருந்து தொடர்பு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் கொரோனாக் காலகட்டத்தில் அரசியல் கைதிகளினுடைய பெற்றோரை, குடும்பத்தினரை கவனிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு இருக்கின்றது. இதுவே அரசியல் கைதிகளின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது- என்றார். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வுக்கும் கிளி.பொலிஸாருக்கும் தொடர்பா?

## ஊற்றுப்புலம் மக்கள் சந்தேகம்



**கிளிநொச்சி, ஜூன் 23**

**சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கினால், அது மணல் கடத்துபவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு தகவல் வழங்குபவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று ஊற்றுப்புலம் கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் அன்மைய நாள்களாக இடம்பெறுகின்ற அதிகரித்த சட்டவிரோத மணல் அகழ்வை இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரைப் பயன்படுத்தியாவது கட்டுப்படுத்துங்கள் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊற்றுப்புலம் கிராமத்தின் குளத்துப் பகுதியை அண்டியதாகவும், அங்குள்ள சில விவசாயிகள் வருடத்துக்கு ஒருமுறை நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற பிரதேசங்களிலும் இரவு பகலாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. கிராமத்தில் வசிக்கின்ற சிலரின் ஒத்துழைப்புடன் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக காடுகள், விவசாய நிலங்கள் மற்றும் வீதிகள் என்பவை மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

கிராமத்தில் அக்கறையுள்ளவர்கள் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களின் அச்சுறுத்தல் காரணமாகக அமைதியாகி விட்டனர். பொலிஸாருக்கு தகவல் வழங்க பொதுமக்கள் அஞ்சுகின்றனர். காரணம் தகவல் வழங்குகின்றவர்கள் யார் என்பதை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் அறிந்துகொள்கின்றார்கள். இதனால் தமது பாதுகாப்பு கருதி பலர் அமைதியாகிவிடுகின்றனர்.

எனவே இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையினரையாவது பயன்படுத்தி இந்த சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-214)



# திரிபடைகின்றது டெல்டா வைரஸ்

## இலங்கைக்கு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 23

டெல்டா கொரோனா வைரஸின் அடுத்த கட்ட அவதானிப்பாக, மற்றொரு மாறுபாட்டுடன் வைரஸ் திரிபடைந்துள்ளது என்று இந்திய சுகாதார அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளுக்குக் காரணமான டெல்டா வைரஸ் மேலும் மாற்றமடைந்து

வீரியம் மிக்க புதிய வடிவத்தில் பரவத் தொடங்கியுள்ளது என்று அவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் புதிய டெல்டா பிளஸ் தொற்றுடன் 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களது தொற்று மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன என்று அந்த மாநிலத்தின் சுகாதார அமைச்சர் ராஜேஷ் ரோப் தெரிவித்துள்ளார்.

டெல்டா வைரஸ் உலகில் 80 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. இலங்கையிலும் இந்த வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனால் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஒ.4)



# 73 ஆண்டுகளுக்குப் பின் ஐ.தே.கவுக்கு ஓர் ஆசனம்

## ரணில் இன்று பதவியேற்பு

கொழும்பு,ஜூன் 23

சுமார் 73 ஆண்டுகளுக்குப் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஒரேயொரு உறுப்பினர் மட்டும் சபையில் அங்கம் வகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று சபை அமர்வுகளில் பங்கேற்கவுள்ளார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது.

சபாநாயகர் அறிவிப்பு முடிவடைந்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினராக ரணில் பதவிப்பிரமாணம் செய்வார்.

நாடாளுமன்றில் எதிர்க்கட்சிப் பக்கம் முன்வரிசையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 ஆம் இலக்க ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் 1947 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பிடித்தது.

அன்று முதல் 2015 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் ஆளுங்கட்சி இல்லையேல் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையே ஐ.தே.க. பெற்றிருந்தது. கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் இரட்டை இலக்கத்திலேயே இருந்தது.

2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தல் ஐ.தே.கவுக்கு மரண இடியாக அமைந்தது. தேசியப்பட்டியல் ஊடாக ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்தது. அதற்கமைவாக ரணில் அந்த ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளார். (ஒ.4,44)

# ஆபரண ஏற்றுமதியை ஊக்குவிக்கத் திட்டம்

கொழும்பு,ஜூன் 23

இலங்கையில் மாணிக்கம் மற்றும் ஆபரண ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு ஏதுவாக, ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல், அலரி மாளிகையில் இடம்பெற்றது.

நாட்டின் ஏற்றுமதி செலாவணியை அதிகரிப்பதற்கு சுற்றுலாத்துறை போன்றே மாணிக்கம் மற்றும் ஆபரணத் துறையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க வேண்டும் என்று பிரதமர் சுட்டிக்காட்டினார். ஏற்றுமதியாளர்களின் கோரிக்கைக்கு அமைய சுற்றுலா விற்பனையை மையமாகக் கொண்டு, இலங்கையில் வெளிநாட்டு நாணயத்தைப் பயன்படுத்துவதற்கு, வருமான வரியிலிருந்து விலக்கு அளிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (ஒ.4)




# அஹ்னாப் ஜசீம் விவகாரம் மனிதாபிமானமற்ற செயல்

## மன்னிப்புச்சபை விசனம்

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள ஆசிரியரும், கவிஞருமான அஹ்னாப் ஜசீம், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றார் என்று சர்வதேச மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ளதாவது,

அஹ்னாப் ஜசீம் என்பவர் எவ்வித குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளத் தகுந்த ஆதாரங்களுமின்றி பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் உடல் நலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மிக மோசமாகவும், மனிதாபிமானமற்ற விதத்திலும் நடத்தப்பட்டுள்ளார். அவரை வற்புறுத்தி பொய்யான வாக்குமூலத்தைப் பெறுவதற்கும் அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். அஹ்னாப் ஜசீம் கைதுசெய்யப்பட்டதிலிருந்து சுமார் 10 மாதங்கள் வரை சட்ட உதவியை நாடுவதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் சட்ட உதவியைப் பெறுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட போதிலும், அவருக்கும், அவரது சட்டத்தரணிக்கும் இடையிலான கலந்துரையாடல் அதிகாரிகளால் பதிவுசெய்யப்பட்டது. அதுமாத்திரமன்றி அஹ்னாப் ஜசீமின் குடும்பத்தினரும் சட்டத்தரணிகளும் அவரை உரிய தினங்களில் அணுகுவதற்கும் தடையேற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் அஹ்னாப் ஜசீமின் சட்டத்தரணிகள் அவருக்குச் சார்பாக வாதங்களை முன்வைப்பதைத் தடுக்கும் நோக்கில், அவரது குடும்பத்தார் மற்றும் சட்டத்தரணிகளுக்கு அறிவிக்காமல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்- என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல் கைதிகளின் விடுதலைக்கு

# பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாது ஒழிப்பதே ஒரே தீர்வு!

### நாமலுக்கு கஜேந்திரகுமார் பதில்



**கொழும்பு, ஜூன் 23**

**அரசியல் கைதிகளின் விடுதலைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாதொழிப்பதே ஒரே தீர்வு. அதைவிடுத்து உங்கள் அரசியல் நலனுக்காக இந்த விடயத்தைப் பயன்படுத்தாதீர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் நாமல் ராஜபக்ச தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'நாமல் ராஜபக்ச அரசியல் கைதிகள் விடு தலை தொடர்பில் தெரிவித்த கருத்துகளை வரவேற்கும் அதே நேரம், செயற்பாட்டில் ஏதும் இல்லாதவாறு வெறுமனே தத்தமது கருத்துகளை அரச தரப்பினர் எழுந்தமானமாக கூறி விட்டு முடிப்பதை, குறிப்பாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர் ஆரம்பமாகியிருக்கின்ற இந்தக் காலப்பகுதியில், ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்ற இந்த காலப்பகுதியில் இப்படியாக ஏமாற்றுத்தனமான கூற்றுகளை வெறுமனே கூறுவதை தவிர்க்க வேண்டும்.

அரசியல் கைதிகள் விடயமென்பது ஒவ்வொருவரும் தத்தமது விருப்பங்களுக்கி ணங்க வெறுமனே கருத்துச் சொல்லிவிட்டு அமருகின்ற ஒரு விடயம் அல்ல. இங்கு உண்மையில் அடிப்படைப் பிரச்சினையாக இருப்பது பயங்கரவாதத் தடைச் சட்டமே.

அந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டமே எதுவித நீதியான முறைமைகளும் இன்றி தடுத்துவைக்கின்றமை உட்பட பல அநீதியான முடிவுகளுக்கு இடம் கொடுத்திருக்கிறது. அதனடிப்படையிலேயே அரசியல் கைதிகள் நீதியற்ற விதமாக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே வெறுமனே பேச்சளவில் மட்டும் அரசியல் கைதி களின் விடு தலை என கூறிக் கொண்டு காலத்தை கடத்துவதில் பயனில்லை.

இந்த அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இந்த நாடாளுமன்றிலும் இதற்கு முந்திய நாடாளுமன்றிலும் தமிழ்த் தரப்பினர் குரல்கொடுத்தபோது அதை இங்கு இருப்பவர்கள் பலமாக எதிர்த்திருந்தனர். அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுப்பவர்களை 'புலிகள் ' என அழைத்தனர்.

இன்று தமிழர் தரப்பு அரசியல் கைதிகள் தொடர்பில் கூறியவற்றையே (ஜி.எஸ். பி.பிளஸ் கேள்விக்கு உள்ளாகியிருக்கும் இந்த காலப்பகுதியில்) நாமல் ராஜபக்ச கூற முற்படுகிறார் - என்றார். (ம)



### வீதியில் பழுதடைந்த பாரவூர்தி

## மாற்றுப்பாதையில் பயணித்த வாகனங்கள்

வவுனியா.ஜூன் 23

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் நேற்று மதியம் பாரவூர்தியொன்று பழுதடைந்து வீதியில் நின்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், மாற்றுப் பாதையூடாக வாகனங்கள் பயணித்தன.

ரயில் நிலைய வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த எரிபொருள் தாங்கி கொண்ட பாரவூர்தியொன்று மணிக்கூட்டு கோபுர சந்தியில் பழுதடைந்து நின்றது. இதன் காரணமாக ரயில் நிலைய வீதி ... வவுனியா நகர் வீதியூடான போக்குவரத்து ... அடைந்தது.

[illegible]

## பாடசாலை மாணவர்களுக்கு சித்திரம் வரைதல் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 23

"தொற்றுநோய்" என்ற கருப்பொருளில் பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டியை நடத்த இலங்கை மருத்துவ சங்கம் முன்வந்துள்ளது.

இதன்படி பாலர் பாடசாலை முதல் 10ஆம் தரம் வரையான மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்க முடியும்.

எந்தவொரு சித்திரமுறையின் மூலமும் படைப்புகளை சமர்ப்பிக்கலாம் . ஒரு மாணவர் அதிகபட்சம் இரண்டு சித்திரங்களை சமர்ப்பிக்க முடியும்.

போட்டியாளர்கள் தமது படைப்பின் புகைப்படத்தை 0703091419 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கோ அல்லது slmaart2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தோர் அறிவிக்கவும்

### சாவ.நகர சபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி.ஜூன் 23

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தவர்கள் உடனடியாக சபை அலுவலகத்தில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கவும் என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனாத் தொற்று மற்றும் பயணத்தடை காரணமாக அலுவலக செயற்பாடுகள் இயங்காத வேளையில் அனுமதி பெறாமல். கட்டடங்களை அமைத்துள்ளனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தவர்கள், வேலைகளை நிறுத்தி உடனடியாக சபை அலுவலகத்தில் உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குக, தவறின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-9)

# மக்கள் பயன்பாட்டுக்கென கட்டடங்களை வழங்குங்கள்

### மாங்குளம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு மாங்குளத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குரிய இரு கட்டடங்களையும் மக்கள் பயன்பாட்டுக்கு மாற்றுவதில் பிரதேச சபை மந்த கதியில் செயற்படுகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் ... [illegible]

... உறுப்பினர் மு.முகுந்தகஜன் பிரதேச சபை அமர்வுகளில் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்திருக்கின்றார். பிரதேச சபையிலும் மக்களின் பயன்பாட்டுக்கு விரைவில் மாற்றுவோம் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இரு கட்டடங்களையும் கடந்த பல ஆண்டுகளாக மக்கள் பயன்பாட்டுக்கு மாற்றாமல் பல்வேறு காரணங்களைக் கூறி பிரதேச சபை ... [illegible]

... டைகளின் உறைவிடமாக தற்போது மாறியுள்ளன. அரசியல் விடயங்களையும் கண்டனத் தீர்மானங்களையும் நிறைவேற்றுகின்ற ஒரு பிரதேச சபையாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை காலத்தைக் கடத்துகின்றது.

ஆனால் முல்லைத்தீவு மா... [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை தொடர்ந்து துன்புறுத்தும் இலங்கை

## ஐ.நா. கரிசனை



**கொழும்பு,ஜூன் 23**

**போரின் பின்னரும் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செலே பச்செலெட் கரிசனை வெளியிட்டுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கள் பேரவையின் 47 ஆவது அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் தற்போதைய பயங்கரவாதத்தடைச் சட்டவிதிமுறைகள் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் ஆகியோரை இலக்காக வைத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழர்கள் தொடர்ந்து துன்புறுத்தப் படுவது தொடர்பில் நான் கரிசனை கொண்டுள்ளேன். போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் தருணத்திலும், தமிழர்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

கடந்த காலக்குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்காத நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகளை மேலும் பாதிக்கின்றன.

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகள், பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் கீழ், முஸ்லிம்கள், தமிழர்களை தடுத்து வைக்க உதவியுள்ளன. இவை நல்லிணக்கத்தை முன்னெடுக்க உதவப்போவதில்லை.

தீவிரவாதமயப்படுத்தப்பட்டவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் இன்றி, இரண்டு வருடங்கள் தடுத்துவைப்பதற்கு இந்த விதிமுறைகள் வழிவகுக்கின்றன. பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள வேளை நிகழ்கின்ற உயிரிழப்புகளும் தொடர்கின்றன - என்றார். (ஒ.4)

# காணிப்பிணக்குகளைத் தீர்க்குமாறு புதுக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 23

காணிப்பிணக்குகள் தீர்த்துவைக்கப்படாத நிலை தொடர்வதால்,பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என்று முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவிக்கையில்;

அரசுக்கு காணியை வழங்கிய மக்களுக்கு இதுவரை மாற்றுக்காணிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. இதனால் காணிகளுக்கான ஆவணங்கள் இல்லாது பெரும் இடர்களை எதிர்நோக்கி வருகின்றோம். குறிப்பாக கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் நகரின் அபிவிருத்தி தேவைக்காக பொதுமக்களின் காணிகள் அரச திணைக்களங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவர்களில் எமக்கு மாற்றுக்காணிகள் இன்னும் வழங்கிவைக்கப்படாது தொடர்சியாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவருகின்றது. இது தொடர்பில் வடமாகாண காணி ஆணையாளர் மற்றும் மாகாண ஆளுநர் ஆகியோருக்குத் தெரியப்படுத்திகூட இதுவரை இதற்கான தீர்வு முன் வைக்கப்படவில்லை. இவ்வாறு காணிப்பிணக்குகள் தொடர்சியாகக் காணப்படுவதால் குடும்பங்களுக்கிடையில் வன்முறை மற்றும் குடும்ப பிரிவு ஆகியவைகூட ஏற்பட்டுள்ளன. கடந்த காலத்தில் தேர்தல் வந்தபே தேர்தல் முடிந்த பின்னர் செய்வோம் என்று சொன்னவர்கள் இப்போது கொரோனாக் காலத்தில் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறுகின்றனர். எனவே விரைவில் காணிக் கச்சேரி ஒன்றை நடத்தி எமது காணிப்பிணக்குகளை பிரதேச செயலகம் தீர்த்துவைக்க வேண்டும் - என்றனர். (ப-19)

# முல்லையைச் சேர்ந்த நபர் உயிரிழப்பு



முல்லைத்தீவு, ஜூன் 23

சுவிட்சர்லாந்தின் அயல் நாடுகளில் ஒன்றான ஒஸ்திரியா நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தல் முல்லைத்தீவைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணம்செய்த அவரை எதிரே வந்த வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றது. முல்லைத்தீவுப் பகுதியைச் நேர்ந்த 50 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சாமித்தம்பி பிரசிஸ் தாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. போருக்குப் பின்னர் போரால் பாதிக்கப்பட்ட குறித்த நபரின் குடும்பம் புலம்பெயர்ந்து ஒஸ்திரியா நாட்டில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-19)

# அம்பலப்பெருமாள்குளம் - வன்னேரி வீதியை சீரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 23

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தில் இருந்து கிளிநொச்சியின் வன்னேரிக்குளம் செல்லும் வீதியைச் சீரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 1954ஆம் ஆண்டு கிளிநொச்சியின் வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது. 1968ஆம் ஆண்டு முல்லைத்தீவின் அம்பலப்பெருமாள்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. 1970ஆம் ஆண்டிலிருந்து வன்னேரிக்குளம் கிராம மக்கள் துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கூட்டுறவுச் சங்கக் கிளையில் தான் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக அம்பலப்பெருமாள்குளம் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வீதி தற்போது பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது. குறித்த வீதி சீரமைக்கப்படுமானால் அம்பலப்பெருமாள்குளம் மக்கள் இலகுவாக வன்னேரிக்குளத்தைச் சென்றடைய முடியும். வன்னேரிக்குளம் மக்களும் துணுக்காய் போன்ற பகுதிகளுக்கு இலகுவாகச் செல்ல முடியும் என்பதோடு, இந்த வீதி சீரமைக்கப்படுமானால் விவசாய நடவடிக்கைகளுக்கும் இலகுவாகப் பயணிக்க முடியும் என்பதுடன் விவசாய உள்ளீடுகளையும் இலகுவாக வயல் நிலங்களுக்கு எடுத்துச்செல்ல முடியும். எனவே குறித்த வீதியின் சீரமைப்புத் தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-13)

# சிறு கட்சிகளுக்கு திட்டமிட்டே அநீதி

## அமைச்சர் வாசுதேவ விசனம்



கொழும்பு.ஜூன் 23

சிறு கட்சிகளின் அமைச்சர்களுக்கும், கட்சிகளுக்கும் திட்டமிட்டே அநீதி இழைக்கப்படுகின்றது. இவற்றுக்கு எதிராக போரட்டங்களை முன்னெடுக்க நாங்கள் தயாராக இல்லை என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் அமைச்சுக்கு கீழிருந்த பொஸ்போட் நிறுவனத்தை, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு கீழ் கொண்டுவந்த விடயத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. சிலரது தேவை, கோரிக்கை மற்றும் அவசியம், அளவீடுகள் ஆகிவற்றுக்கு அமைவாக இந்த மாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் இலாபமடைந்த பின்னர் இந்த நிறுவனத்தை கைமாற்றியமையை ஏற்றுக் கொள்ள முடியாது. எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் கலந்துரையாடுவோம் - என்றார். (ஒ.4)

# கலப்பு முறைமையில் இனிவரும் தேர்தல்கள்

## விசேட நாடாளுமன்றக் குழு இணக்கம்

கொழும்பு.ஜூன் 23

எதிர்வரும் தேர்தல்களை கலப்பு முறையின் கீழ் முன்னெடுப்பதற்கு விசேட நாடாளுமன்றக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது. தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்றக் குழு, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கூடியது. இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஆகிய முறைமைகளில் மாற்றங்களை மேற்கொள்வற்கு, கலந்துரையாடல்களை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை மறுசீரமைப்புத் தொடர்பில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த காலக்கெடு எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்துக்கு முன்னர் முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு, குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

முன்மொழிவுகளை sec.pscelectionreforms2021@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அல்லது செயலாளர், நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாளுமன்றம், சிறிஜயவர்த்தனபுர கோட்டை என்ற முகவரிக்கு தபால் மூலமும் அனுப்பி வைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளை மறுசீரமைப்பது தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவுக்கு இதுவரை கிடைத்துள்ள முன்மொழிவுகளின் எண்ணிக்கை 94 என்று குழுவின் செயலாளர் குஷானி ரோஹனதீர சுட்டிக்காட்டினார். (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சீன ஆக்கிரமிப்பு அமெரிக்காவை நாடும் இந்தியா

கொழும்பு,ஜுன் 23

**இலங்கையில் சீனா சார்பான பல்வேறு அபிவிருத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால், இலங் கைக்கு அருகில் உள்ள இந்தியப் பெருங்கடல் பிராந் தியத்தின் பாதுகாப்பை அதிகரிக்க இந்தியா அமெரிக் காவின் உதவியை நாடியுள்ளது.**



அமெரிக்காவிடமிருந்து 30 ஆளில்லா விமானங்கள், மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கொள்வனவுசெய்யப் படும் என்று இந்திய கடற்படையின் துணைத் தலைவர் வைஸ் அட்மிரல் அசோக்குமார் தெரிவித் துள்ளார். இவை கடல் பாதுகாப்பு ஆளில்லா விமானங்கள். தொடர்ந்து 48 மணித்தியாலம் வரை பறக்கக் கூடியன. நீர்மூழ்கிக் கப்பல்களை அழிக்கும் வல்லமை மற்றும் கடல் கண்காணிப்புக்கான நவீன தொழில் நுட்ப வசதி ஆகிய வற்றை இவை கொண்டுள்ளன- என்றார்- (ஒ.4)

## மோட்டார் போக்குவரத்து அலகில் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள்

சாவகச்சேரி,ஜுன் 23

தென்மராட்சி பிரதேச செயலக மோட்டார் போக்குவ ரத்து அலகால் மட்டுப்படுத்தப்பட்ட அளவான சேவை கள் இடம்பெற்று வருகின்றன.

அவசர தேவைகளுக்கென வாகன வரிப் பத்திரம் பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வரு கின்றன. வாகனவரிப் பத்திரம் பெற மக்கள் நேற்று காலை தொடக்கம் நீண்ட வரிசையில் காத்திருந்த தைக் காணமுடிந்தது. (ஜ-9)

## அன்டிஜென் பரிசோதனை: எவருக்கும் தொற்றில்லை



சாவகச்சேரி,ஜுன் 23

நான்கு மருத்துவர்கள் உள்ளிட்ட 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோத னையில் எவருக்கும் தொற்றில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிய கத்தால் குறித்த 13 பேருக்கும் அன்டிஜென் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவு கள் வெளியான நிலையில் எவருக்கும் தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)




## நடைபாதை வியாபாரிகளால் கொரோனா பரவும் அபாயம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா, ஜுன் 23

வவுனியாவிலுள்ள நடைபாதை வியாபாரி களால் கொரோனாத் தொற்று பரவலடை யும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், போக்குவ ரத்து நெரிசலும் ஏற்படுகின்றது என்று குற்றம்சாட்டப்படுகின்றது.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன்,அரசால் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை நேற்றுமுன்தினம் விலக்கப் பட்டது.

இதனையடுத்து வவுனியா மாவட்டத்தில் அதிகளவான பொதுமக்கள் பல்வேறு தேவைகள் நிமித்தம் நகருக்குள் வருகை தந்து பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் வவுனியா சந்தைச் சுற்றுவட்ட வீதியின் இருமருங்கு கள் மற்றும் கொறவப்பொத்தானை வீதி ஆகியவற்றில் உள்ள நடைபாதைகளில் மரக்கறிகள் மற்றும் ஏனைய பொருள் களை வைத்து விற்பனைசெய்துவரும் வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளை உரியவகையில் பேணவில்லை என்று குற் றம்சாட் டப்படுகின்றது.

இதேவேளை குறித்த வியாபாரிகளிடம் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யும் பொதுமக்களும் சுகாதார நடை முறைகளைப் பேணாமல் நெரிசலை ஏற்படுத்துகின்றனர்.

இதனால் குறித்த பகுதிகளில் போக்குவ ரத்து நெரிசலும் ஏற்படுகின்றது. எனவே நகரசபை மற்றும் சுகாதாரப் பிரிவினர் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள் ளது. (ய-10)

## தென்மராட்சி பிரதேசத்தில் 7,683 பேருக்கு 5,000 கொடுப்பனவு

சாவகச்சேரி,ஜுன் 23

பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 7 ஆயிரத்து 683 சமுர்த்தி பய னாளிகளுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முதியோர் கொடுப்பனவு பெறும் சமுர்த்தி பயனாளர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுக்கு மேல திகமாக 3 ஆயிரம் ரூபா கருணைத் தொகையாக முதி யோர் தேசிய செயலகத்தால் வழங்கப்படவுள்ளது .

சமூக பாதுகாப்பு அலகினரால் விவசாய ஓய்வூதியம் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியம் ஆகியவை பெறுவோ ருக்கு அந்தந்த திணைக்களங்களால் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (ஜ-9)



# மொழியை அழிப்பதும் இன அழிப்புத்தான்

## விக்னேஸ்வரன் எம்.பி. கண்டனம்

கொழும்பு,ஜுன் 23

மொழி என்பது ஒரு இனத்தின் அடை யாளம். உலக நாடுகள் பலவற்றில் தமிழுக்கு மிக உயரிய மதிப்பு வழங் கப்படுகின்றபோது, தமிழ் மக்கள் பல ஆயிரம் வருட பூர்வீகத்தைக் கொண்ட தங்கள் நிலத்தில், சுதேசிகளான தமிழ் மக்களின் தமிழ் மொழி கொலை செய்யப்படுகின்றமை பெரும் மன உளைச்சலையும், வேதனையையும் தருகின்றது. மொழியை அழிப்பதும் இன அழிப்புத்தான் என்பதை மறந்து விடக்கூடாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பின ரும், வடக்கு மாகாண சபை முன் னாள் முதலமைச்சருமான சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கையில்,

கிராம சேவகர் பிரிவுகளை இணை யம் வழியாக தொடர்புகொள்வதற் கான விபரங்களை அரச தகவல் நிலைய இணையம் அண்மையில் வெளியிட்டுள்ளது. இதில் தமிழர்க ளின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கை யின் தமிழ்ப்பெயர்கள் உள்ளிட்டவை முழுக்க முழுக்க எழுத்துப் பிழைகளு டன் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் சில கிராமங் களின் பெயர்கள் தவறாக வெளியி டப்பட்டுள்ளன. உதாரணமாக யாழ்ப் பாணத்தை 'யாழ்பாணம்' என்றும், முல்லைத்தீவை 'முள்ளைத்தீவு' என்றும், துணுக்காயை 'துணுக்கை' என்றும், கூழாமுறிப்பை 'கோல முறிப்பு' என்றும், முழங்காவிலை 'முலங்கவில்' என்றும், இயக்கச்சியை 'ஜயக்கச்சி' என்றும் பிழையாக வெளி யிட்டுள்ளனர். இவை அனைத்தும் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவ னத்தில் கொள்ள வேண்டும்.

காலம் காலமாக தமிழ் மொழியை பிரயோகிப்பதில் அரச நிர்வாகம் கண்டுவரும் தோல்வியின் தொடர்ச் சியாகவும், தமிழ் மொழி மீதான மதிப்பற்றதன்மையும் அலட்சியப் போக்காகவுமே இது நடந்துள்ளது.

ஏற்கனவே பஸ்களில் தமிழ்மொழிச் சொற்கள் தூசன வார்த்தைகளாக எழுதப்பட்டதைக் கண்டு மிக வேதனை அடைந்திருக்கிறேன்.

அதேபோன்று அரச சுற்றறிக்கைகள் கூட தமிழ்மொழியில் வெளியிடப்படா மல் தனிச் சிங்களத்தில் வெளியிடப் படுவதாலும் இன்று வரை தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் சில திணைக்களங்களுக் குச் சென்றால், மக்கள் தமிழில் உரை யாடி தமது தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையும் காணப்ப டுகின்றது. இந்த விடயத்தில் நான் அரசை மாத்திரம் குற்றம் சொல்ல மாட்டேன். டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் காலம் காலமாக அமைச்சராக இருந்து தமிழர்களுக்கு சேவையாற்றுகிறோம் என சொல்லி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு அதி காரத்தையோ அல்லது அபிவிருத்தி யையோ கூட இவர்களால் பெற்றுக் கொடுக்க முடியாது போனாலும் ஆகக்குறைந்தது தமிழ் மொழிக் கொலையையாவது தடுக்க முடியாத கையறு நிலையில் இவர்கள் இருக் கின்றனர்- என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

## விலைக்கேள்விக்கான கோரல் - 2021

1. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகக்கான தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.
3. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) . Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் **அட்டவணையின் படி** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 23.06.2021 **தொடக்கம்** 06.07.2021 **வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை** நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 07.07..2021 **ஆந்** திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 07.07..2021 ஆம் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும் .
8. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் **29.06.2021**ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/06/LIMI/B4/01 | Construction of Ambulance Garage at BH-Puthukkudiyiruppu | 3.055 | 88 Days | C8 and C7 (Buildings) | 31,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/02 | Construction of GHC with PHM quarters Vithiyapuram at MOH Oddusuddan | 4.948 | 105 Days | C8 and C7 (Buildings) | 50,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/03 | Renovation and repair of GHC Ananthapuram | 2.411 | 82 Days | C8 and C7 (Buildings) | 25,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/04 | Construction of PHM quarters in Thirumurikanddy at MOH Oddusuddan | 4.268 | 99 Days | C8 and C7 (Buildings) | 43,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/05 | Construction of PHM quarters in Vinayakarpuram at MOH Manthai East | 4.268 | 99 Days | C8 and C7 (Buildings) | 43,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/06 | Renovation and Improvement of Male Ward at DH-Sampathnuwara | 2.822 | 86 Days | C8 and C7 (Buildings) | 29,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/07 | Renovation and Improvement of Female Ward at BH-Mallavi | 4.898 | 104 Days | C8 and C7 (Buildings) | 49,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/LIMI/B4/08 | Renovation and Improvement of Old OPD Block at DH-Oddusuddan | 3.127 | 89 Days | C8 and C7 (Buildings) | 32,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |
| NP/MU/2021/06/PSSP/B4/09 | Modification and improvement of OPD block at DH-Naddankandal | 2.524 | 83 Days | C8 and C7 Buildings) | 26,000.00 | Till 06.10.2021 | 2,000.00 |

**"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" dated 18.02.2021 and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.**

வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை.
முல்லைத்தீவு

# விஜய்யின் 'பீஸ்ட்'க்கு எதிர்ப்பு




நெல்சன் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படத்துக்கு 'பீஸ்ட்' என தலைப்பு வைக்கப் பட்டு உள்ளமைக்கு எதிர்ப்பு கிளம்பி உள்ளது. நடிகர் விஜய்யின் 65 ஆவது படத்தை நெல்சன் இயக்குகிறார். இப்படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. அதன்படி படத்துக்கு 'பீஸ்ட்' என பெயரிடப் பட்டு உள்ளது.

இந்நிலையில், நடிகர் விஜய்யின் பீஸ்ட் பட தலைப்புக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அந்த கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு இது தொடர்பாக பதிவு ஒன்றை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில், "நடிகர் விஜய் நடிக்கும் படங்கள் தமிழில் தான் எடுக்கப்படுகின்றன என்றும், ஆனால் தமது தாய்மொழியான தமிழ் மொழியை மதிக்காமல் தொடர்ந்து ஆங்கில பெயர்களையே வைப்பதன் மர்மம் என்னவோ" என வன்னி அரசு கேள்வி எழுப்பி உள்ளார்.

'மாஸ்டர்', 'பிகில்' படங்களை தொடர்ந்து 'பீஸ்ட்' என பெயர் சூட்டி தாய்மொழியை புறக்கணித்து அவமானப்படுத்துவது சரியா? என நடிகர் விஜய்க்கு, வன்னி அரசு கேள்வி எழுப்பி உள்ளார்.

## தவறிவிட்டது

நேற்று 22.06.2021 (செவ்வாய்க்கிழமை) ஸ்ரான்லி வீதியிலிருந்து பொஸ்கோ பாடசாலைக்கு செல்லும் வீதிக்கு இடையில் சின்னத்தம்பி சிவபாலன் ஆகிய எனது கைப்பை தவறி விட்டது. அதனுள் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட் என்பன உள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**077 784 3491 / 077 969 7472**

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 29 . 02 . 1929



மறைவு 16 . 06 . 2019

## அமரர் பொன்னையா இராமநாதபிள்ளை

இமை மூடும் நேரததில் எங்களை விட்டு பிரிந்தீர்கள்
நாங்கள் இருக்கும் வரை உங்கள் நினைவில தான்
இருப்போம்....

என்றும் நீங்கா நினைவுகளுடன்...

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு.
தியேட்டர் லேன்
077 828 0730

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1946



மறைவு 22 . 06 . 2021

## திரு. சிங்கராயர் லீனஸ் மரியநாயகம்

### யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

கரம்பன் ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராயர் லீனஸ் மரியநாயகம் (யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்) அவர்கள் நேற்று (22.06.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கராயர் மேரி மாகிறேட் தம்பதிகளின் புதல்வனும், காலஞ் சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மேரி றெஜினா தம்பதிகளின் அன்பு மருமகனும், மேரி கிளாறாவின் அன்பு கணவரும், தர்சினி, தர்சன் (உதயா செரமிக்ஸ்) வசந்தன் (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெவ்றி வில்சனின் (குளோமல் மல்ரி ரேடர் சென்டர் உரிமையாளர்) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான றோசலின், ஞானப்பிரகாசம், பொன்மணி, ஜேசுதாசன் மற்றும் பற்றிக், மாட்டீன், றோஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், [illegible] ஜேசன், ஜேன் லீலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.06.2021) புதன்கிழமை [illegible] கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் முற்பகல் 9.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 236 7388
077 445 6562

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### நகராட்சி மன்ற எல்லைக்குள் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான காணி கொள்வனவு.

மேற்படி சிறுவர் பூங்கா அமைப்பதற்காக சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் யாழ் வீதிக்கு அருகாமையாக நுணாவில மத்தி J/307 கிராம அலுவலர் பிரிவில் வட்டாரம் 05 இல் கீழ் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளினை நகராட்சி மன்றம் கொள்வனவு செய்வதில் எவருக்கும் ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் இன்றிலிருந்து 14 நாட்களுக்குள் "தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக எழுத்து மூலம் அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்கள் மூலம் தெரிவிக்கலாம்.

**ஆதன விபரம் 01**

பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை முன்பாக நிறைவேற்றப்பட்ட இலக்கம் 387 திகதி 15.06.1998 உறுதி மூலம் நுணாவில் மத்தி சாவகச்சேரி பண்டாரி பெண் செல்லாச்சி தனது கீழ் குறிப்பிடப்பட்ட ஆதனத்தினை அவ்வூர் பண்டாரி மகேந்திரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவில் பற்று நுணாவில் இறை திலகம் தோட்டம் மடவளவு நிலப்பரப்பு 3 குளி 7 1/2 இவ் ஆதனத்தின் எல்லைகள்.
கிழக்கு - தங்கரூபன் கைம்பெண் பூமணிக்குரிய ஆதனம்
வடக்கு - இராசகுலேந்திரன் பெண் செந்தில்மலரிற்கும், சின்னத்தம்பி சாதசிவத்திற்குமுரிய ஆத்னம்
மேற்கு - ஏழு அடி அகலமான ஒழுங்கை முகப்பும், செல்லையா பெண் பொன்னம்மாவிற்குரிய ஆதனம்
தெற்கு - கந்தையா பெண் நல்லம்மாவிற்குரிய ஆதனம்

**ஆதன விபரம் 02**

பிரசித்த நொத்தாரிசு செ.பாலகிருஸ்ணன் முன்பாக நிறை வேற்றப்பட்ட இலக்கம் 2203 திகதி 22.02.1992 உறுதி மூலம் நுணாவில் முருகேசு அரியரத்தினமும் பெண் இராமேஸ்வரியும் தங்களது கீழ் குறிப்பிடப்பட்ட ஆதனத்தினை அவ்வூர் மாணிக்கன் தங்கரூபன் பெண் பூமணியிடம் அறுதியாக விற்றுள்ளனர்.
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவில் பற்று நுணாவில் இறை திலகம் தோட்டம் மடவளவு நிலப்பரப்பு 4 குளி 1. இவ் ஆதனத்தின் எல்லைகள்.
கிழக்கு - முலைக்குடி முதலிக்குரிய ஆதனம்
வடக்கு - வேலுப்பிள்ளை கந்தையாவுக்குரிய ஆதனம்
மேற்கு - பண்டாரி பெண் செல்லாச்சிக்குரிய ஆதனம்
தெற்கு - சபாபதி சிதம்பரப்பிள்ளைக்குரிய ஆதனம்

**சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**2021.06.23**

## மரண அறிவித்தல்



**தோற்றம் :16.07.1954 மறைவு :22.06.2021**

### திருமதி அழகேஸ்வரி தங்கராஜா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வட்டு வடக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகேஸ்வரி தங்கராஜா அவர்கள் நேற்று (22.06.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை - சின்னத்தம்பி மனுவேல்இராணியம்மா தம்பதியரின் மகளும், கணபதி - தங்கராஜா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், ராஜ்பிரசாந், ஜெகனா, பிரசண்ணா, நிவேதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரி, விக்கிரமசிங்கம் மற்றும் சிவசுப்பிரமணியம், பாலசுந்தரம், பரமேஸ்வரி காலஞ்சென்ற பவளேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பிருந்தாபன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமியாரும், பூர்விகா, யஸ்விகா, சாகித்தியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நேற்று (22.06.2021) செவ்வாய்க்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெல்லிப்பளை வீதி,**
**வட்டு வடக்கு, சித்தங்கேணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 9297 377**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
19 . 10 . 1966



இறப்பு
22 . 06 . 2021

### துரைச்சாமி சந்தான கிருஷ்ணன்


திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 1ம் வட்டாரத்தினை வசிப்பிடமாகவும், சாரங்கா நகைமாட வாடிக்கையாளரும் நெருங்கிய நண்பருமாகிய திரு. துரைச்சாமி சந்தான கிருஷ்ணன் அவர்கள் நேற்று (22.06.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு நயினை நாகபூசணி அம்மனின் திருப்பாதம் அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாரங்கா நகைமாடம்**
**(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)**
**சாரங்கா நகைமாட உரிமையாளரும் ஊழியர்களும்.**


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
## ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 12
ஆதன இல :- வெற்றில்க்கம் 51/1
வீதி :- தும்மலை வீதி, இளவாலை
கிராம சேவையாளர் பிரிவு :- J/155

எமது இடாப்பில் வட்டாரம் 12, தும்மலை வீதி, இளவாலை, ஆதன இல. வெற்றிலக்கம் ஆகவுள்ள 51/1 எனும் இலக்கத்தில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற் பற்று சிறுவிளான் இறை "கோவிந்தபுரம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 1, குழி 1.15 கொண்ட ஆதனத்தை நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை பெண் திரேசம்மா என்பவர்களால் அல்போன்ஸ்ராசா என்பவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதென்றும், பின்னர் இவ் ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு. இ.த அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7001ம் இலக்க 16.10.2018ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் பிதாவழி முதுசமாக அன்ரன் வசந்தகுமார் பெண் இருதயநாயகி என்பவருக்கு சொந்தமானதென்றும் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. M. சண்முகநாதன் அவர்களால் வரையப்பட்ட 3926ம் இலக்க 10.10.2018ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "கோவிந்தபுரம்" நிலப்பரப்பு 1, குழி 1.15 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அன்ரன் வசந்தகுமார் பெண் இருதயநாயகி எனும் பெய்ருக்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.
இந் நிலப்பரப்பு 1 குழி 1.15 க்குமான எல்லைகள்
கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- செபமாலைநாயகம் பெண் மரியமலரின் ஆதனம்
மேற்கு :- பிலேந்திரன் சூசைராசாவின் ஆதனம்
தெற்கு :- மயிலு செல்லத்துரையின் ஆதனம்




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை,**
**மானிப்பாய.**



# நயனம் (கண்)
## ஆரோக்கியத்துக்கான பயிற்சி

நம்மை விட விலங்குகளுக்கு பார்க்கும் திறன் அதிகமாக உள்ளதற்கு காரணம் அவைகளை விட நாம் கண்களை அதிகமாக உபயோகப்படுத்துவது மற்றும் கண்களுக்கு தேவையான ஓய்வை கொடுப்பதில்லை என்பதும் தான். நம் முன்னோர்களுக்கு கண்ணின் முக்கியத்துவத்தைப் பற்றி தெரிந்ததாலேயே அதை முக்கியமான ஒன்றுடன் ஒப்பிடுவார்கள் உதாரணத்துக்கு 'கல்வி கண் போன்றது' ஒருவனுக்கு கண் எவ்வளவு முக்கியமோ அது போல் கல்வியும் முக்கியம் என்பதை உணர்த்துவதற்காக இவ்வாறு கூறினார்கள்.
இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கண்ணை நாம் பாதுகாக்க சில பயிற்சிகளை எப்படி செய்வது என்று பார்ப்போம்.

**இமைத்தல் பயிற்சி:** ஒரு புத்தகத்தை எடுத்து படிக்கும்போது அல்லது எழுதும் போது ஒவ்வொரு வரியை முடிக்கும் போதும் கண்களை இருமுறை இமைக்க வேண்டும்.

**விரல் பயிற்சி:** ஆள்காட்டி விரலை முகத்துக்கு முன்பாக ஆறு அங்குலத் தொலைவில் வைத்துக் கொள்ளவும் பிறகு வலது கண்ணிலிருந்து இவ்விரலை பார்த்தவாறு மறுபக்கத்துக்கு தலையை மெதுவாக திருப்பவும். இவ்வாறு மாற்றி மாற்றி 5 நிமிடம் இப்பயிற்சியை செய்யவும்.

**ஒளி பயிற்சி:** காலை மற்றும் மாலை இவ்விரண்டு வேளைகளிலும் இயற்கையை அல்லது வானத்தை பார்த்தபடி நின்று கொள்ளவும். இவ்வாறு பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு இப்பயிற்சியை செய்யவும்.

**உள்ளங்கை பயிற்சி:**
கண்களை மூடிக்கொண்டு உள்ளங் கைகளால் கண்களை பொத்திக் கொள்ளவும் 10 முதல் 15 நிமிடங்கள் வரை இப்பயிற்சியை செய்யவும்.

**கண் குளியல்:** ஒரு அகன்ற பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பிக் கொள்ளுங்கள் பிறகு குனிந்து ஒரு கண்ணை அந்நீரில் வைத்து பத்து முறை கண்ணை மூடி திறக்கவும். இவ்வாறு மறு கண்ணிலும் 10 முறை இப்பயிற்சியை செய்யவும்.

**கண்களை உருட்டும் பயிற்சி:** கண்களை மேலும் கீழுமாக 10 முறையும், வலமிருந்து இடது புறமாகவும் 10 முறையும், இடமிருந்து வலது புறமாகவும் 10 முறை சுழற்ற வேண்டும். பிறகு வலது உள்ளங்கையால் இடது கண்ணையும், இடது உள்ளங்கையால் வலது கண்ணையும் அழுத்தம் கொடுக்காமல் மெதுவாக கண்களை மூடி 10 வினாடிகள் கழித்து கண்களை மெதுவாக திறக்க வேண்டும்.

**தூர மற்றும் கிட்ட பார்வைக்கான பயிற்சி:**
ஆள்காட்டி விரலை முகத்துக்கு முன்பாக வைத்துக் கொள்ளவும் பிறகு அந்த விரலை பார்க்கவும், இரு முறை இமைக்கவும் பின்னர் தூரத்திலுள்ள ஒரு பொருளை பார்க்கவும் பின்னர் இரு முறை இமைக்கவும். இவ்வாறு மாற்றி மாற்றி 10 நிமிடங்கள் செய்யவும். கண்ணின் முக்கியத்துவத்தை பற்றிய புரிதலும் மற்றும் ஓய்வுமே கண் பார்வையை பாதுகாக்கும். கணினியில் வேலை செய்யும் போது 20 நிமிடத்துக்கு ஒரு தடவை தூரத்தில் உள்ள பொருள்களை பார்த்துவிட்டு பின் கணினிய்ய பயன்படுத்தவும். இவ்வாறு செய்வதால் கண்களுக்கு ஓய்வு கிடைப்பதோடு எந்த பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்கும். நாம் சத்தான உணவை எடுத்துக் கொள்வதோடு, மேற் குறிப்பிட்டுள்ள பயிற்சிகளை மேற்கொண்டால் நம் கண் பிரச்சினைகளை போக்குவதோடு கண் பார்வையை கூர்மையாக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஆங்கிலம் கற்போம்



Apple – அப்பிள்



Orange – தோடம்பழம்




Pineapple – அன்னாசி



Banana – வாழைப்பழம்

# உழைப்பின் பலன்



ஒரு பணக்கார தந்தைக்கு ஒரே கவலை. தன் மகன் சுயமாக பணம். சம்பாதிக்கும் வயது வந்தும் இன்னும் அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்காமல் ஊதாரித்தனமாக ஊர் சுற்றிக் கொண்டிருப்பதை எண்ணி எப்போதும் வருத்தப்பட்டார்.

ஒரு நாள் பொறுக்கமாட்டாமல் தினம் நூறு ரூபாய் சம்பா தித்துக் கொண்டு வந்தால்தான் இனி வீட்டில் தங்க முடியும் என்று கண்டித்தார்.

மறுநாள் வீட்டுக்குள் நுழையும்போது பையன் நூறு ரூபாய் எடுத்து நீட்டினான். அவனுடைய அப்பா அங்கே எரிந்து கொண்டிருந்த விளக்கில் காட்டி பணத்தை எரியவிட்டார். போய் சாப்பிடு என்றார்

மறுநாளும் உள்ளே நுழையும்போது அவன் கொடுத்த நூறு ரூபாவை விளக்கில் எரியவிட்டார்.

மூன்றாவது நாள் பணத்தை விளக்கில் காட்டி எரியவிடும்போது மகன் தாவி அதை அணைத்தான். அப்பா என்ன செய்கிறீர்கள் என்று அலறினான்.

அவர் சொன்னார். "இன்றுதான் உண்மையில் நீ உழைத்து சம்பாதித்து பணம் கொண்டு வந்திருக்கிறாய்" ஆச்சரியமடைந்த மகன் "எப்படி கண்டு பிடித்தீர்கள்" என்றான்.

நீ உழைத்து சம்பாதிக்காத பணம் கரியானபோது நீ கவலைப்படவில்லை அதுவே உன் உழைப்பு என்கிறபோது நீ துடித்துவிட்டாய்.... போய் சாப்பிடு. "உழைப்பின் அருமையும் பணத்தின் அருமையும் தெரிந்ததால் இன்று நீ சாப்பிடுகிற சாப்பாடு கூடுதல் சுவையாக இருக்கும்" என்றார் மலர்ந்த முகத்தோடு.

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

| | |
|---|---|
| மற்றவர்களில் அக்கறை கொள்ளாதவர் | - சுயநலவாதி |
| தன்னைப் பற்றி தானே எழுதும் சரிதை | - சுயசரிதை |
| தெருக்கள் கூடுமிடம் | - சந்தி |
| அகரவரிசைப்படி பொருள் கூறும் நூல் | - அகராதி |
| முனிவர்கள் வசிக்கும் இடம் | - ஆச்சிரமம் |
| வீண் செலவு செய்பவன் | - ஊதாரி |
| தேர்தலில் போட்டியிடுபவர் | - வேட்பாளர் நம்ப முடியாத |
| கதை | - கட்டுக்கதை |



## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. பாலசந்திரன் மதியுகன்**
அவர்களின் அன்புத் தாய்

**பாலசந்திரன் திருமலர்ச் செல்வி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிச் சங்கம்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.**

## மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



### திருமதி சிவசக்தி சோமநாதன்

**(BA, MA, PGDE)**

(திருவாவடுதுறை சித்தாந்தரத்தினம், திருமுறை நெறிச் செல்வர், அறநெறிச்சுடர்)

**சேவை விரபம்**

06.09.1994 – 31.12.2013 வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
01.01.2014 – 22.06.2021 வரை மானிப்பாய் மகளிர் கல்லூரி

இந்து சமய பாடத்தை
இதமாய்ச் சொல்லி மாணவரின்
சிந்தைதன்னில் இடம் பெற்றார்
சிறந்த எங்கள் சிவ சக்தி!

சைவசித்தாந்த சாகரமாய்
சொற்பொழிவில் ஒரு சிகரமென
சைவம் தமிழ் இரண்டினையும்
தழைக்கச் செய்த பெருமாட்டி!

கள்ளங் கபடம் இல்லாத
கனிவுச் சிரிப்பு பேச்சாலே
உள்ளம் கவர்ந்தீர் அனைவரதும்
உவப்புடனே வாழி என்றும்!



Congratulations

எமது பாடசாலையின் பகுதித்தலைவராகவும், இந்து நாகரிக பாட ஆசிரியராகவும் ஏழு வருடங்கள் அரும்பணியாற்றி இன்று (23.06.2021) புதன்கிழமை மணிவிழாக்காணும் நாயகியை, எமது கல்லூரியின் காவலனாக விளங்கும் முருகப் பெருமானின் ஆசியுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலிச் சந்தேகநபர்களை...

இவ்வாறு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரிடம் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வழக்குகளில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் வழக்குகளை நிறைவுசெய்ய முடியாததால் பல இளைஞர்கள் இன்று சிறைச்சாலைகளில் இருக்கின்றனர். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதானவர்கள் பல வருடங்களாக சிறைச்சாலைகளில் உள்ளனர். நல்லாட்சியின்போது நானும் சிறையில் அடைக்கப்பட்டேன்.

புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில், வழக்கு விசாரணை முடிவடைந்து தண்டனை அனுபவிப்பவர்களின் எண்ணிக்கை 35 ஆகும். இந்த 35 பேரிலும் பெரும்பாலானவர்கள், தமக்கு கிடைக்கப்பெற்றுள்ள தண்டனை காலத்தை விடவும், அதிக வருடங்களை சிறைகளில் கழித்துள்ளனர்.

அத்துடன், மேலும் 38 பேருக்கு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பான வழக்குகள் கூட 20 வருடங்களாக நடைபெற்றுள்ளன. வழக்கு விசாரணை முடிவடைந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத 116 பேரும் சிறைகளில் இருக்கின்றனர்.

இவர்களுக்கு தவறான வரலாறு இருந்திருக்கலாம். சிலர் தெரியாமல் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் பல வருடங்களாக சிறைகளில் உள்ளனர். இவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். எனவே, ஒன்று வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து தண்டனை வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவர்களுக்கு எதிராக முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பிரகாரம் நீதிமன்றத்தால் பிணை வழங்க முடியாது. சட்டமா அதிபர் ஊடாக அல்லது மறுவாழ்வளித்தாவது நீதி வழங்கப்பட வேண்டும்.

ஏனெனில் நாட்டு மக்கள் எவருக்கும் அநீதி இழைக்கப்படக்கூடாது என்பதே இந்த அரசின் நிலைப்பாடாகும்- என்றார். (ம-4.44)

### திங்களன்று...

சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார். குறித்த 71 சாவுகளும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சம்பவித்துள்ளன.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 704ஆக அதிகரித்துள்ளது. இதுவரையான நாள்களில் ஒரே நாளில் (ஜூன் 21) நிகழ்ந்த அதிகபட்ச கொரோனா சாவுகளாக இது பதிவாகியுள்ளது.

கடந்த 10ஆம் திகதி 101 மரணங்கள் பதிவாகியிருந்த போதிலும் அவை பின்னர் கடந்த 4 மாதங்களில் நிகழ்ந்த கொரோனா சாவுகளின் தொகுப்பு என ஜனாதிபதி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

### நேற்று...

யல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 43 ஆயிரத்து 891ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 9 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 9 ஆயிரத்து 296ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 891ஆக அதிகரித்துள்ளது எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-22)

### வடக்கில்...

செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவு களின் அடிப்படையில் 89 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 14 பேருக்கும், யாழ். சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 22 பேருக்கும், மானிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், தெல்லிப்பழை சுகாதாரப் பிரிவில் 6 பேருக்கும், சங்கானை சுகாதார பிரிவில் இருவருக்கும், யாழ். போதனா மருத்துவமனையில் 9 பேருக்கும், பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் எடுக்கப்பட்ட மாதிரிகளின் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வேலணை சுகாதாரப் பிரிவில் மூவருக்கும் என 80 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனைவிட முள்ளிக்குளம் சுகாதாரப் பிரிவில் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவருக்கும், புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருவருக்கும், மன்னார் மருத்துவமனையில் இருவருக்கும், தனிமைப்படுத்தல் இரணைமடு பிரிவில் ஒருவருக்கும், பளை மருத்துவமனையில் ஒருவருக்கும், கே.கே.எஸ். இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவருக்கும் என வடமாகாணத்தில் 89 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

### விபத்தில்...

உயிரிழந்தார். செல்வம் விஜயகுமார் (வயது 41) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த 15ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது ஓட்டோவுடன் மோதிக் காயமடைந்தார். இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

### மோ.சைக்கிள்...

டைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி வதிரியில் இந்தச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றது என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த வீரவாகுப்பிள்ளை கெங்கேஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவர். அவரது சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் நெல்லியடிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-26)

### மாகாணப்....

குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'நாள்கூலி வேலைசெய்யும் மக்களின் நன்மை கருதியே மாகாணங்களுக்குள் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அதுவும் ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமையவே பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

ஜனாதிபதியின் இந்த முடிவை ஒரு சாரார் வரவேற்கின்றனர். இன்னொரு சாரார் விமர்சிக்கின்றனர். எனினும், மக்களின் நலன்கருதி ஜனாதிபதி எடுத்த இந்தத் தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம். பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் ஒவ்வொரு மாகாணங்களிலும் சுகாதாரப் பிரிவின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கொரோனாத் தொற்றின் வேகம் இன்னமும் குறையவில்லை. நாளாந்த கொரோனா மரண எண்ணிக்கையும் இன்னமும் குறையவில்லை. இந்த நிலையில், மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகளை இப்போதைக்குத் தளர்த்த முடியாது. மேல் மாகாணம் மிகவும் ஆபத்தான வலயமாக இருக்கின்றது. இங்கு கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமடையும்.

மாகாணங்களுக்குள் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை மக்கள் ஒவ்வொருவரும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். 'டெல்டா' கொரோனா வைரஸையும் நாம் எதிர்கொள்ள வேண்டிவந்துள்ளது. எனவே, அனைத்துத் தரப்பினரும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும்' என்றார். (ம-22)

### கொரோனாவால்....

கின்றன.

இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 72ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 55 வயதுடைய பெண் ஒருவரும் 65 தொடக்கம் 85 வயதுக்குட்பட்ட ஆண்கள் மூவருமே நேற்று உயிரிழந்தவர்களாவர். (ம-26)

# பின்லாந்தை தோற்கடித்து பெல்ஜியம் முன்னேற்றம்



பிரசெல்ஸ், ஜூன் 23

யூரோ கிண்ணத் தொடரில் 16 அணிகள் கொண்ட சுற்றுக்கு முன்னேறியது பெல்ஜியம். நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டத்தில் பின்லாந்தை வீழ்த்தியே பெல்ஜியம் அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.



ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் பின்லாந்து வீரர் லூகாஸ் 'ஒன்கோல்' பதிவுசெய்ய அது பெல்ஜியத்துக்குச் சாதகமாக முடிந்தது. அடுத்த சில நிமிடங்களில் ரோமலு லுகாகு பெல்ஜியத்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் வெற்றிபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி

# சரிவை சமன்செய்தது இந்தியா இரு அணிகளும் சம பலத்தில்!




சவுத்தாம்டன், ஜுன் 23

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதியாட்டத்தின் நேற்றைய ஐந்தாம் நாளில் நியூசிலாந்து அணியை 249 ஓட்டங்களில் வீழ்த்தியது இந்திய அணி. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 217 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸுக்காகப் பெற்றது. அதிகபட்சமாக ரகானே 49 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெமிசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வில்லியம்சன் 12 ஓட்டங்களுடனும், ரெய்லர் ஓட்டமெதையும் பெறாத நிலையிலும் ஆட்டத்தின் ஐந்தாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரெய்லர். சமியின் பந்துவீச்சு நேற்று நன்றாக வேலைசெய்தது. வில்லியம்சன் பெற்ற 49 ஓட்டங்கள்தான் நியூசிலாந்தில் அதிகபட்சம். அந்த அணி 249 ஓட்டங்களைப் பெற்று 32 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

பந்துவீச்சில் சமி 4 இலக்குகளையும், இசாந் சர்மா 3 இலக்குகளையும், அஸ்வின் 2 இலக்குகளையும் ஜடேயா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. புஜாரா 12 ஓட்டங்களுடனும், கோலி 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரிலுள்ள வீடொன்றில் தங்கி நின்று வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 02 50 339

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 08 . 1939



இறப்பு 20 . 06 . 2021

### திரு.வேலுப்பிள்ளை பரமநாதன்

**(முன்னாள் அச்சக முகாமையாளர் - சி.க.கூ.சங்கம்)**

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், முள்ளானை இளவாலை, வவுனியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமநாதன் அவர்கள் கடந்த (20.06.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, அன்னப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், கஜசிறி (கஜன்- சுவிஸ்), நிறஞ்சனா (சுவிஸ்), ஜெயசிறி (பிரித்தானியா), சுபசிறி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செந்தில்நாதன் (RVG நீர்வேலி), பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கபிலர், பாலகௌரி, கல்பனா, பிரியதர்ஷினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜீவறஞ்சிதமலர், செல்வநாயகி ஆகியோரின அன்பு மைத்துனரும், சுவிஸைச் சேர்ந்த பௌத்திரி, மாதிரி, யதுஷா, டினுஷா, விபுஷன், பிரித்தானியாவைச் சேர்ந்த கிருஷ்மிகா, சர்விகா, மலேசியாவைச் சேர்ந்த வன்சிகா, சஸ்மிதா, சஸ்விக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோணிக்கல்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6621 745, 024 2050 207

# ரஷ்யாவை வீழ்த்தி 16க்குள் டென்மார்க்

உரோம், ஜுன் 23

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ரஷ்யாவை மிகமிக இலகுவாக வீழ்த்தியது டென்மார்க் அணி. இதையடுத்து 16 அணிகள் கொண்ட சுற்றுக்கு டென்மார்க் முன்னேறியது.

ஆட்டத்தின் 39ஆவது நிமிடத்தில் மிக்கெல் டென்மார்க்கின் முதலாவது கோலைப் பதிவுசெய்து அந்த அணிக்கு முன்னிலையை வழங்கினார். 1:0 என்று டென்மார்க்கின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 59ஆவது நிமிடத்தில் யூசொப் டென்மார்க்கின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 70ஆவது நிமிடத்தில் ரஷ்யாவுக்குப் பெனால்டி கிடைக்க அதை ஆர்டெம் டைபா கோலாக்கினார். அதன் பின்னர் கிறிஸ்ரென்சன் 79ஆவது நிமிடத்திலும், ஜொகிம் 82ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வென்றது டென்மார்க் அணி. (ம)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும். (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:
077 468 3354, 076 221 2037, 077 2880 152

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். யாழ் நகரிலிருந்து 1½ km தூரம் (பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**

தொடர்பு: 076 734 1023, 077 064 2661

## வாழ்த்துகின்றோம்

Congratulations!



நாட்டிற்காகவும் மக்களிற்காகவும்
பாராளுமன்றம் செல்கின்ற
**கௌரவ**
**ரணில் விக்கிரமசிங்க**
அவர்களுக்கு
தீவக மக்களின் சார்பில்
வாழ்த்துக்கள்

**மண்கும்பான் பிரபு**
உறுப்பினர்
வேலணை பிரதேச சபை,
அமைப்பாளர் ஐ.தே.க தீவகம்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org